




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 190 21.02.2026 சனிக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 190 | Saturday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

சனிக்கிழமை
(21–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–9
பிறை: வளர்பிறை
திதி
சதுர்த்தி பிற்பகல்
2.12 வரை பிறகு பஞ்சமி
நட்சத்திரம்:
ரேவதி இரவு 8.15 வரை
பிறகு அசுவினி
யோகம்
மரண/சித்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00–10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30–3.00 மணி.
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 5–6

மேஷம் .............. ஆதாயம்
ரிஷபம் .................. ஆதரவு
மிதுனம் .............. உவகை
கடகம் ................. போட்டி
சிம்மம் .................. லாபம்
கன்னி ................ பெருமை
துலாம் .............. நற்செயல்
விருச்சிகம் ................ நட்பு
தனுசு ................ உண்மை
மகரம் .................. தேர்ச்சி
கும்பம் .................. கீர்த்தி
மீனம் .................. சாதனை

# எங்கள் சாதனைகளை நாங்களே மிஞ்சும் அளவுக்கு திராவிட மாடல் 2.0 ஆட்சி இருக்கும் : முதலமைச்சர்

**சென்னை,பிப்.21:**

தமிழக சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசும், வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வமும் சிறப்பான இடைக்கால நிதிநிலை அறிக்கையையும், பதிலுரையையும் வழங்கியிருக்கிறார்கள். அடுத்த இரு மாதங்களில் இதனை கூடுதல் விரைவுடன் தொடர்வோம் என்ற நம்பிக்கை உள்ளது. மக்களின் நம்பிக்கை எங்களை ஆட்சியாளராக தொடரச் செய்யும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசை நடத்தி இருக்கிறோம் என்ற மனநிறைவு எனக்கு இருக்கிறது. எனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை மிகச்சிறப்பாக நடத்தியதாக நான் உணர்கிறேன். எங்களுக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என பிரித்துப் பார்க்காமல் நான் செயலாற்றியிருக்கிறேன். 234 தொகுதிகளையும் எனது தொகுதிகளாகவே நினைத்து பணிபுரிந்தேன்.

ஆட்சி செய்ய மிகப்பெரிய வாய்ப்பை தந்த தமிழ்நாட்டு மக்களுக்கும், என்னை தேர்ந்தெடுத்து அனுப்பிய கொளத்தூர் தொகுதி மக்களுக்கும் எனது நன்றிகள். திராவிட மாடலின் 5 ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தினால் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான், இன்று கூடுதல் வலிமைப் பெற்று, தமிழ்நாட்டை மேலும் ஏற்றம்பெற வைக்க முடியும் என்ற நம்பிக்கையையும், ஊக்கத்தையும், எதனையும் எதிர்கொள்ளக்கூடிய வல்லமையையும் பெற்றுள்ளேன்.



எங்கள் சாதனைகளை நாங்களே மிஞ்சும் அளவுக்கு திராவிட மாடல் 2.0 ஆட்சி இருக்கும். ஆராய்ந்து முடிவெடுக்கும் பண்பு; அந்த முடிவினால் விளையும் பயன்; பயன்பெற்றவர்களின் உயர்வு; உயர்வினால் உண்டாகும் வளம்; வளத்தினால் விளைந்திடும் இன்பம்; இன்பத்தால் கிடைத்திடும் நன்மை என்பதுதான் இன்று நாம் காணும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை.

தம்முடைய சுயமரியாதை எள் முனையளவு சீண்டப்பட்டாலும், அது யாராக இருந்தாலும் எதிர்குரல் கொடுக்கும் திசையில் முதல் ஆளாக நான் இருப்பேன். மற்றபடி, கவர்னருக்கும் எனக்கும் தனிப்பட்ட விரோதம் இல்லை. ஆகவே, தமிழர் பண்பாட்டை மனதில்கொண்டு, அவருக்கும் எனது நன்றிகள்.

அரசின் குறைகளை சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி. சாதனைகளுக்கு தோள் கொடுத்த தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். தலைமைப் பொறுப்பில் உள்ளோருக்கு பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை ஆகியவை தேவை.

சட்டப்பேரவையில் கருத்து மோதல்கள் ஏற்படும்போது அனுபவத்தாலும் அறிவாற்றலாலும் அதனை உரிய வகையில் எதிர்கொள்ளும் என் அண்ணன் துரைமுருகன், இடுப்பு எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், அவர் விரைந்து உடல் நலம் பெற்று வரவேண்டும் என விரும்புகிறேன். அவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## சட்டசபையில் அமைச்சர்களின் பதில் உரை: அ.தி.மு.க. புறக்கணிப்பு



தமிழக சட்டசபையில் கடந்த 17-ந் தேதி 2026-2027-ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. பொது பட்ஜெட்டை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசும், வேளாண்மை பட்ஜெட்டை அத்துறையின் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வமும் தாக்கல் செய்தனர். தொடர்ந்து, 18, 19 ஆகிய தேதிகளில் 2 நாட்கள் பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் பங்கேற்று ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். விவாதத்தின் நிறைவு நாளான நேற்று அதிமுக பொதுச் செயலாளரும், சட்டசபை எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி பேசினார். அவருடைய அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்தனர். இதனால், சட்டசபையில் அனல் பறந்தது என்றாலும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த விவாதத்தின்போது அவையில் இல்லை.

இந்த நிலையில், சட்டசபையில் இன்று பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதில் அளித்து அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் ஆகியோர் பேசுகிறார்கள். ஆனால், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. அமைச்சர்களின் பதிலுரையை புறக்கணித்துள்ளது. எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்பட அ.தி.மு.க. உறுப்பினர்கள் யாரும் அவைக்கு வரவில்லை.

அதேநேரத்தில் ராமதாஸ் ஆதரவு பா.ம.க. எம்.எல்.ஏ.க்கள் ஜி.கே. மணி, அருள் ஆகியோர் சட்டமன்ற கூட்டத்தொடரில் கலந்து கொண்டுள்ளநிலையில், அன்புமணி ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 3 பேர் கூட்டத்தை புறக்கணித்துள்ளனர்.

இதற்கு முன்பு கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான முதல்-அமைச்சரின் பதிலுரையையும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் புறக்கணித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

## வேற்றுகிரகவாசிகள் பற்றிய ரகசிய கோப்புகளை வெளியிட டிரம்ப் உத்தரவு!

**புதுடெல்லி,பிப்.21:**

வேற்றுக்கிரகவாசிகள் உள்ளனரா,இல்லையா என உலகம் முழுவதும் பல ஆண்டுகளாக விவாதிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்க ஆய்வாளர்கள் வேற்றுக்கிரகவாசிகளைப் பிடித்து வந்து, அந்நாட்டின் நெவாடா பகுதியில் உள்ள ரகசியமான இடமான 'ஏரியா 51'-இல் வைத்து ஆய்வு செய்து வருவதாகவும் அவ்வப்போது தகவல் வெளியாகி வருகிறது. இதை அமெரிக்கா இதுவரை உறுதி செய்யவில்லை.

சமீபத்தில் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா, யூடியூபர் ஒருவருக்கு அளித்த பேட்டியின்போது, வேற்றுக்கிரகவாசிகள் இருப்பது உண்மைதான், ஆனால் நான் இதுவரை பார்த்ததில்லை என்றார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஒருவரே, வேற்று கிரகவாசிகள் இருப்பதாக கூறியிருப்பது, உலகம் முழுவதும் பல விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், வேற்றுகிரகவாசிகள் மற்றும் அவர்கள் பயன்படுத்தும் விமானங்கள் பற்றிய கோப்புகளை ரகசிய பட்டியலில் இருந்து நீக்கி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ள டிரம்ப் தெரிவித்திருப்பதாவது: "மக்களிடையே ஏற்பட்டுள்ள அதீத ஆர்வத்தை தொடர்ந்து வேற்றுகிரகவாசிகள், வேற்றுகிரக வாழ்க்கை, அடையாளம் காணப்படாத வான்வழி நிகழ்வுகள் மற்றும் அடையாளம் காணப்படாத பறக்கும் விமானங்கள் தொடர்பான அரசின் ரகசிய கோப்புகளை அடையாளம் கண்டு, பொதுமக்களின் பார்வைக்கு வெளியிட உத்தரவிட்டுள்ளேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# சட்டசபையில் மு.க.ஸ்டாலினுடன் ஓ.பன்னீர்செல்வம் சந்திப்பு

**சென்னை,பிப்.21:**

2021-ம் ஆண்டு சட்டசபை தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.க.வில் இருந்து ஓரம் கட்டப்பட்ட முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு குழு என்ற அமைப்பை தொடங்கி சட்டப் போராட்டம் நடத்தி வருகிறார்.

ஆனால், அ.தி.மு.க.வை அவரால் இதுவரை மீட்க முடியவில்லை. அது முடியாது என்று தெரிந்த நிலையில், அவருடைய ஆதரவாளர்கள் ஒவ்வொருவராக வெளியேறி மாற்றுக் கட்சியில் இணைந்து வந்தனர்.

கிட்டத்தட்ட தனித்து விடப்பட்ட நிலையில் இருக்கும் ஓ.பன்னீர்செல்வம், சட்டசபை தேர்தலில் என்ன முடிவு எடுக்கப்போகிறார்? என்ற கேள்வி அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக எழுந்தது.



'தைப்பிறந்தால் வழி பிறக்கும்' என்று அவர் கூறிவந்த நிலையில், தை மாதத்தில் எந்த அரசியல் முன்னெடுப்பையும் அவர்மேற்கொள்ளவில்லை. என்றாலும், நிர்வாகிகளை சந்தித்து பேசிய அவர், "அ.தி.மு.க.வில் மீண்டும் இணைய நான் ரெடி, சேர்த்துக்கொள்ள அவர்கள் ரெடியா?" என்று கேள்வி எழுப்பினார்.

ஆனால், ஓ.பன்னீர்செல்வம் கோரிக்கை வைத்த அன்றைய தினமே, "அது நடக்கவே நடக்காது" என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மறுத்துவிட்டார். இதனால், ஓ.பன்னீர்செல்வம் மவுனம் காத்து வந்தார்.

இந்த நிலையில், சமீபத்தில் பத்திரிகையாளர்கள் அவரிடம், "தை மாதமும் முடிந்துவிட்டது. உங்கள் முடிவுதான் என்ன?" என்று கேள்வி எழுப்பினர். அதற்கு ஓ.பன்னீர்செல்வம், "பொறுமையாக இருங்கள்" என்று மட்டும் கூறிச் சென்றார்.

இந்த நிலையில், இன்று யாரும் எதிர்பாராத வகையில், சட்டசபை நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த ஓ.பன்னீர்செல்வம், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை அவரது அறைக்கு சென்று பூங்கொத்து கொடுத்து சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது, அரசியல் குறித்து பேசியதாக கூறப்படுகிறது. சட்டசபை தேர்தலில் அவர் தி.மு.க.வுடன் இணைந்து செயல்பட முடிவு செய்துவிட்டாரா? என்ற கேள்வியும் எழுகிறது.

ஏனென்றால், ஓ.பன்னீர்செல்வம் அரசியல்கட்சி எதுவும் தொடங்கவில்லை. இயக்கம் மட்டுமே நடத்தி வருகிறார். எனவே, திமுகவிலேயே ஐக்கியமாக திட்டமிட்டுள்ளாரா? என்ற யூகங்களையும் மறுக்க முடியவில்லை.

ஏற்கனவே, ஓ.பன்னீர்செல்வத்தின் ஆதரவு எம்.எல்.ஏ.க்களாக இருந்த மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம் ஆகியோர் திமுகவில் இணைந்துவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய கட்சியைத் தொடங்கிய பண்ருட்டியார்


**சென்னை,பிப்.21:**

முன்னாள் முதல்வர் ஓபிஎஸ்ஸின் அரசியல் ஆலோசகராகவும், அவருக்கு பக்கபலமாகவும் இருந்த மூத்த அரசியல்வாதி பண்ருட்டி ராமச்சந்திரன், தற்போது ஓபிஎஸ் அணியிலிருந்து விலகி எம்ஜிஆர் அதிமுக என்ற பெயரில் புதிய கட்சியைத் தொடங்கியுள்ளார்.

இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியதாவது: இன்றைய அரசியல் சூழல் அடையாள அரசியலையும், கொள்கை அரசியலையும் சார்ந்து சுழல்கிறது. பிறப்பின் அடிப்படையில் எவருக்கும் வாய்ப்புகள் மறுக்கப்படக்கூடாது.

திறமையுள்ள அனைவருக்கும் சமவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு 'நீதிமிக்க சமுதாயத்தை' உருவாக்குவதே இந்த இயக்கத்தின் பிரதான நோக்கம். இந்த இயக்கம் உடனடியாகத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தொடங்கப்படவில்லை. இது ஒரு நீண்ட நெடிய அரசியல் பயணம். தேர்தல் என்பது இந்தப் பயணத்தில் வரும் ஒரு சடங்கு போன்றது. எங்களது கொள்கைகளுக்கு உடன்படுபவர்களைத் தேர்தலில் ஆதரிப்போம்.

ஓபிஎஸ் அத்தியாயம் முடிந்துவிட்டது. தனிப்பட்ட ஒரு நபருக்காக அரசியலில் வாழ்நாளை வீணாக்க முடியாது. அரசியல் என்பது தனி மனிதருக்கானது அல்ல, அது மக்களுக்கானது. நாம் தனிப்பட்ட முறையில் ஒருவருடன் பயணித்தோம் என்பதற்காக நம் வாழ்நாளை அங்கேயே முடக்கிவிட முடியாது. ஓபிஎஸ்க்காக உயிரையா துறக்க முடியும்? நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய எவ்வளவோ பிரச்சினைகள் உள்ளன. வரும் தேர்தலில் போட்டி என்பது திமுகவிற்கும் விஜய்க்கும் இடையில்தான் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.



பிறகு கருப்பு, வெள்ளை, சிவப்பு ஆகிய மூன்று வண்ணங்கள் கொண்ட தனது கட்சியின் கொடியை அவர் அறிமுகப்படுத்தினார். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தாரக மந்திரத்தோடு தொடங்கப்பட்டுள்ள இந்த இயக்கத்தின் முறையான தொடக்க விழா மற்றும் விரிவான கொள்கை விளக்கக் கூட்டம், வரும் 23-ஆம் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெற உள்ளது என தெரிவிக்கப்பட்டது.




# இளமனூரில் உலகத் தாய்மொழி நாள் விழா



**மதுரை,பிப்.21:** மதுரை, இளமனூர் அரசு ஆதிதிராவிடர் நல மேனிலைப் பள்ளியில் உலகத்தாய் மொழி நாள் விழா மற்றும் தமிழ் மன்றம் நிறைவு விழா 'மொழிஞாயிறு' தேவநேயப் பாவாணர் நூலக அரங்கத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவிற்குத் தலைமை யாசிரியர் கனகலட்சுமி தலைமை வகிக்க, உதவித் தலைமையாசிரியர் இலசபதி முன்னிலை வகித்தார். தமிழாசிரியர் மகேந்திர பாபு வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய மீனாட்சி நகர் நடுநிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் அல்லிமுத்து கலந்து கொண்டு 'தமிழின் பெருமைகள்' என்ற தலைப்பில் உரையாற்றி, மாணவர்களுக்குப் புத்தகங்களைப் பரிசாக வழங்கினார்.

'அமுதத் தமிழ்' என்ற தலைப்பில் சக்கிமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர் ஜான் பெல்சியாமேரி, கணித ஆசிரியர் தேவி, உடற்கல்வி ஆசிரியர் முத்துராசா வாழ்த்திப்பேசினா. ஒன்பதாம் வகுப்பு மாணவர் கோபிக்கண்ணன் நன்றி கூறினார்.

## விளாத்திகுளம் அருகே வி.வேடபட்டி புனித பால்ஸ் உயர்நிலைப் பள்ளியில் போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு கூட்டம்



**விளாத்திகுளம், பிப்.21:** விளாத்திகுளம் அருகே வி.வேடபட்டி புனித பால்ஸ் உயர்நிலைப் பள்ளியில் போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. ஆசிரியை இராமலட்சுமி வரவேற்றார்.

தலைமை ஆசிரியர் பூ.நாகராஜன் தலைமை தாங்கினார். பேரிலோவன்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.எழிலரசி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "போதைப் பொருட்களின் தீமைகள்" குறித்து உரையாற்றினார் ஆசிரியை புவனேஸ்வரி நன்றி கூறினார்.ஆசிரியப் பெருமக்கள், மாணவ மாணவியர், அலுவலகப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## ஊழல்கோட்டை திமுகவின் அழிவுகாலம் நெருங்கிவிட்டது..!– நயினார் நாகேந்திரன்

**சென்னை, பிப்.21:** தமிழக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

குடிநீர் வழங்கல் துறை ஒப்பந்தங்களில் 10% வரை லஞ்சம் பெற்று ரூ.1,020 கோடி ஊழல் புரிந்த புகாரில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் மீது வழக்கு பதிய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திமுக அமைச்சர் நேரு அவர்கள், அரசு வேலையை விற்று ரூ.888 கோடி ஊழல் புரிந்த புகார் மீதும் கூடிய விரைவில் வழக்கு பதிந்து, உண்மை வெளிக்கொணரப்படும்என்னும் நம்பிக்கையை இந்த நீதிமன்ற உத்தரவு ஏற்படுத்துகிறது.



மொத்தத்தில், மக்கள் வரிப்பணத்தை உறிஞ்சி, கமிஷனில் கொளுக்கும் #ALLFAIL திமுக அரசின் ஊழல் கோட்டை சுக்குநூறாக இடிந்து விழும் நாளுக்கான Countdown இன்றோடு தொடங்கிவிட்டது! கூடிய விரைவில்,

திமுக உடன்பிறப்புகளின் ஒட்டுமொத்த ஊழலும் நீதிமன்றத்தால் வெளிப்படுத்தப்பட்டு, தமிழக மக்களால் ஓட ஓட விரட்டியடிக்கப்படும்!

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வேலூர் விஜய் கூட்டத்துக்கு 4,900 பேருக்கு அனுமதி

**வேலூர், பிப்.21:** வேலூர் மாவட்டம் பள்ளி கொண்டா அடுத்த அகரம்சேரி பகுதியில் தவெக சார்பில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி பிப். 23-ந் தேதி நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தவெக நிர்வாகிகள் செய்து வருகின்றனர். சுமார் 33 ஏக்கர் பரப்பளவு கொண்ட மைதானத்தில் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.



இதற்கிடையில், தவெக தலைவர் விஜய் பங்கேற்கும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி தவெக நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியாக மாற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்து, தவெக தரப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் தலைமையில் வருகிற 23-ந் தேதி அன்று நடைபெறவிருந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியானது, தற்போது நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்க 4,900 நிர்வாகிகளுக்கு க்யூ ஆர் கோடு வசதியுடன் கூடிய நுழைவுச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த சீட்டுகள் ஸ்கேன் செய்யப்பட்ட பின்னரே நிர்வாகிகள் அரங்குக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

இது முற்றிலும் கட்சி நிர்வாகிகளுக்கான சந்திப்பு என்பதால், குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிகள், உடல்நலக்குறைவு உள்ள வர்கள் மற்றும் நுழைவுச்சீட்டு இல்லாதவர்கள் நேரில் வருவதை தவிர்க்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கட்சியின் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை கருதி அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வேம்பாரில் தமிழ்க்கூடல்




**தூத்துக்குடி, பிப்.21:** தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்க்கூடல் விழா பள்ளியின் தலைமையாசிரியர் திருமிகு.மு.மாரிப்பாண்டி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் தொடங்கிய நிகழ்வில் பட்டதாரி தமிழாசிரியர் நிஷா வரவேற்றார். முதுகலைப் பட்டதாரி ஆசிரியை முருகேஸ்வரி நிகழ்வைத்தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பள்ளியின் முன்னாள் மாணவரும், தூத்துக்குடி மாவட்டம் செங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியின் தமிழாசிரியருமான செலஸ்டின் மகிமைராஜ் தமிழரின் தொன்மை, தனித்தன்மை, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை நிகழ்கால மாணவர்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் சங்க இலக்கியக் காட்சிகளோடு, நிகழ்கால இருப்பைத் தொடர்புபடுத்தி சிறப்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து தமிழ்க்கூடலை முன்னிட்டு நடத்தப்பட்ட கலைப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு தலைமை ஆசிரியர், சிறப்பு விருந்தினர் மற்றும் ஆசிரியர்கள் பரிசு வழங்கிப் பாராட்டினர்.

சிறப்புரையின்போது இடையிடையே வினாக்கள் தொடுத்து, விடைபகர்ந்த மாணவர்களுக்கு மரபுக் கவிஞர் பல்லடம் தவணிதனின் விதையின் மொழி என்ற நூலும், திருக்குறள் கதைகளும் சிறப்பு விருந்தினரால் பரிசாக வழங்கப்பட்டன. தொடர்ந்து ஆறாம் வகுப்பு மாணவர்களின் செந்தமிழ் நாடென்னும் போதினிலே பாடலுக்கான நடனமும், மாணவி ஒருவரது கவிதையும் வாசிக்கப்பட்டது.

இறுதியாக பட்டதாரி தமிழாசிரியர் செல்வலட்சுமி நன்றியுரை நிகழ்த்த நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

## அரசு கல்லூரியில் உலகத்தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்பு



**அறந்தாங்கி, பிப்.21:** ஆவுடையார் கோயில் அருகே பெருநாவலூரில இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், உலகத்தாய்மொழி நாளை முன்னிட்டு, உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் ம.துரை அவர்கள் தலைமை தாங்கித் தொடங்கி வைத்தார்.

கல்லூரிக் கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் து. சண்முகசுந்தரம் உள்ளிட்ட பேராசிரியர்கள், கல்லூரிக் கண்காணிப்பாளர் பா.மகாராஜன் உள்ளிட்ட அலுவலகப்பணியாளர்கள், மாணவ, மாணவியர் பலரும் பங்கேற்றனர்.

கல்லூரி முதல்வர் அவர்கள் சார்பாக, உலகத்தாய்மொழி நாள் உறுதிமொழியை, நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் மு. பழனித்துரை வாசித்தளிக்க, அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

## பெண்ணாடம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டுவிழா




**கடலூர், பிப்.20:** பெண்ணாடம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டுவிழா நடந்தது.

கடலூர் மாவட்டம் பெண்ணாடம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10,12 பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்குப் பெற்றோர் வாழ்த்து.

விழாவில் 100 % தேர்ச்சி கொடுத்த ஆசிரியர்களுக்குப் பாராட்டுவிழா. முதல் இரண்டு இடத்தில் தேர்வுபெற்ற 10,12 ம் வகுப்பு மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் விழா மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் இராமச்சந்திரன் தலைமை தாங்கினார். உதவித் தலைமை ஆசிரியர் மதியழகன் வரவேற்புரை ஆற்றினார்.

சிறப்பு அழைப்பாளராக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரமேஷ், மாவட்ட கல்வி அலுவலர் துரைப்பாண்டியன் , முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவரும், உலகத் திருக்குறள் கூட்டமைப்புத் தலைவருமான ஞானமூர்த்தி, பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளர் வெ. சுந்தரபாண்டியன், நகர் மன்ற தலைவர் அமுதலச்சுமி ஆற்றலரசு, பெண்ணாடம் லயன்ஸ் சங்கத் தலைவர் வசந்த்ராஜ், மாவட்டத் தலைவர் சக்திவேல், டாக்டர் மணிமேகலை, நகர் மன்றச் செயலாளர் முத்து, கல்வியாளர் தங்க. வீரப்பன், பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் என். சுகுணா, துணைத் தலைவர் வகிதா, துணைத் தலைமை ஆசிரியர் ராஜலெச்சுமி, ஆர்வலர் இளங்கோவன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். முதுகலை ஆசிரியர் கே. கமலநாதன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

முடிவில் பட்டதாரி ஆசிரியர் கருப்புசாமி நன்றியுரை கூறினார்.

முன்னதாக பொதுதேர்வு எழுதும் அனைத்து மாணவர்கள் அவர் அவர் பெற்றோர்களுக்கு பாதபூஜை செய்து வழிபட்டனர். மாணவர்களை பெற்றோர்கள் ஆசீர்வாதம் செய்தனர். பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வில் மாணவர்கள் சிறப்பாக செயல்படுவதற்கு, பள்ளியின் சார்பில் சிறப்பு வழிபாடு நடந்தது. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் இந்த வழிபாட்டில் பங்கேற்றனர்.

## இளையான்குடி கண்மாய் அருகே குப்பைக் கிடங்கு அமைக்கக் கூடாது நீர் ஆதாரம் பாதிப்படையும்

**அதிமுக கவுன்சிலர் நாகூர் மீரா பேரூராட்சி கூட்டத்தில் எதிர்ப்பு**

**மானாமதுரை, பிப். 21:** சிவகங்கை மாவட்டம், இளையான்குடி கண் மாய் அருகே குப்பைக் கிடங்கு அமைக்கக் கூடாது என பேரு ராட்சி மன்றக் கூட்டத்தில் அதி முக உறுப்பினர் எதிர்ப்புத் தெரி வித்தார்.



சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சி மன்றக் கூட்டம் அதன் தலைவர் நஜூமுதீன் தலைமையில் நடைபெற்றது.

துணைத் தலை வர் இப்ராஹிம், செயல் அலுவலர் அன்னலட்சுமி, தலைமை எழுத்தர் கணேசன், வார்டு உறுப் பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டம் தொடங் கியதும் அதில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் வாசிக் கப்பட்டு உறுப்பினர்களின் ஒப்பு தல் பெறப்பட்டது.

இளையான்குடியில் குப்பைக் கிடங்கு அமைப்பது தொடர்பாககொண் டு வரப்பட்ட தீர்மானம் குறித்து அதிமுக உறுப்பினர் நாகூர்மீரா பேசியதாவது: இளையான்குடியில் குப்பைக் கிடங்கு அமைப்பதற்கு தனி யாரிடமிந்து பேரூராட்சிக்கு சொந்தமாக இடம் வாங்கத் தீர் மானம் கொண்டு வரப்பட்டுள் ளது.

ஆனால், இதில் எந்த இடம்,சர்வே எண் எதுவும் குறிப்பிடப்ப டவில்லை. குப்பைக் கிடங்கைவேறுஇடத் துக்கு மாற்றுவதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆனால், தற்போது குப்பைக் கிடங்கை மாற் றுவதற்கு இளையான்குடி கண் மாய் அருகே இடம் வாங்குவதாக தெரிய வருகிறது. அந்தப் பகுதி யில் குப்பைக் கிடங்கை அமைத் தால் அதன் நீராதாரம் முழுவதும் பாதிக்கப்பட்டு, ஒட்டு மொத்த மக்களின் ஆரோக்கியமும், சுகா தாரமும் பாதிக்கப்படும்.

விவ சாயமும் முற்றிலும் பாதிக்கப்ப டும். எனவே, கண்மாய் அருகே இடம் வாங்குவதை மறுபரிசீ லனை செய்ய வேண்டும். பொது மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் குப்பைக் கிடங்கை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றார் அவர்.

இதைத்தொடர்ந்து உறுப்பினர்களின் பல்வேறு கேள் விகளுக்கு, தலைவர் நஜூமுதீன் பதிலளித்தார்.

## தெப்பம்பட்டி அகோபிலராயப் பெருமாள் கோவில் திருப்பணி விரைவில் தொடங்க வேண்டும்

**பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு வலியுறுத்தல்**



**ஆண்டிப்பட்டி, பிப்.21:** தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகிலுள்ள தெப்பம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு அகோபிலராயப் பெருமாள் திருக்கோவில் பல ஆண்டுகளாக திருப்பணி செய்யப்படாமல் இடிந்த நிலையில் இருந்து வருகிறது.

இக்கோவில், ஊர் பொதுமக்களால் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தமிழக அரசின் அறநிலையத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. இக்கோவிலின் திருப்பணிக்காக கடந்த 19 ஏப்ரல் 2023 அன்று ரூ.1 கோடியே 50 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், இதுவரை எந்தவித பணிகளும் தொடங்கப்படாமல் இருப்பது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழுவின் சார்பில் கோவில் வளாகத்தில் உழவாரப்பணி மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பணியை, குழுவின் ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் தலைமையில் நாகராஜ், சரவணகுமார், கோபிகரன், ரஞ்சித் குமார், சரவணன் மற்றும் வெற்றிவேல் ஆகியோர் மேற்பார்வையிட்டு முன்னெடுத்து வருகின்றனர்.

இதுகுறித்து ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் கூறுகையில், "அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, இக்கோவிலின் திருப்பணியை விரைவில் தொடங்க வேண்டும். முழுமையான உழவாரப்பணியும் விரைவில் மேற்கொள்ளப்படும். இக்கோவில் மீண்டும் வழிபாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பது எங்களின் முக்கிய நோக்கமாகும்" என்றார். 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டிடக்கலையில் உருவாக்கப்பட்டுள்ள இக்கோவில், இப்பகுதியில் சிறந்த சிற்பக்கலையின் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இக்கோவிலின் சிற்பக்கலை மற்றும் கட்டிடக்கலை, நம் முன்னோர்களின் திறமையை வெளிப்படுத்தும் வரலாற்று சான்றாகவும், வருங்கால தலைமுறைக்கு ஒரு முக்கிய பாரம்பரியச் சின்னமாகவும் அமையும்.

மேலும், தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுத்தால் இக்கோவில் மீண்டும் தனது பழைய பெருமையை அடையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்றும், பொதுமக்கள் தங்கள் ஊர்களில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கோவில்களை பாதுகாக்க முன்வர வேண்டும் என்றும் மணிகண்டன் கேட்டுக்கொண்டார்.

## மதுரையில் "வாழ்வொளி நினைவோன்" கலைஇலக்கிய இரவு




**மதுரை, பிப் .21:** தமிழிசைக் கலைஞர் முரசு ஆனந்த் அவர்களின் நினைவாக "வாழ்வொளி நினைவோன்" என்ற தலைப்பில் கலைஇலக்கிய இரவு நிகழ்ச்சி மதுரையில் நடைபெற்றது. சமம் குடிமக்கள் இயக்கத்தின் மாநிலத் தலைவர் வழக்கறிஞர் சி.சே. இராசன் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில், மனித உரிமைக் காப்பாளர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆசிர் முன்னிலை வகித்தார்.

நிகழ்வை சமர் கலைக்குழு வின் பத்மஸ்ரீவேலு ஆசான் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில், முரசு ஆனந்த் அவர்களுடன் முனைவர் பரட்டை, முனைவர் கே.ஏ. குணசேகரன், தோழர் லெனின் சுப்பையா, அலங்காநல்லூர் ஆறுமுகம், நாடகக் கலைஞர் முனிராஜ் ஆகியோரின் உருவப்படங்கள் திறந்து வைக்கப்பட்டன. மக்கள் கண்காணிப்பகம் வழக்கறிஞர் ஹென்றி டிபேன், தமிழக மக்கள் பண்பாட்டுக் கழகம் மீ.த. பாண்டியன், வீதி நாடக பயிற்சியாளர் கிளேர், தலித் பண்பாட்டு மையம் முனைவர் இன்பராஜ் ஜெயக்குமார், நாட்டைக்காப்போம் பால் மைக், பல்சமய உரையாடல் பெனடிக்ட் பர்ணபாஸ், குரலிசை கலைஞர் முத்து ஆகியோர் உருவப்படங்களை திறந்து வைத்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்வில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் களப்பிரான், தமிழ்நாடு இறையியல் கல்லூரி முனைவர் பீட்டர் சிங், புறா ஜான்சி, எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில பெண்கள் அணி தலைவி ,லாஸ் சட்ட மையம் வழக்கறிஞர் சந்தனம்,நாட்டைக்காப்போம் வழக்கறிஞர் பால் பிரிட்டோ, சமம் குடிமக்கள் இயக்கம் சண்முக வேலு, முரசு கலைக்குழு ஜாய் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.மேலும் முரசு, சமர், விடியல், வேர்வை, மையம் ஆகிய கலைக்குழுக்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. குரலிசை பாடகர்கள் கருணாநிதி, முத்து, குருஸ், அருள் ஆகியோர் சமூகநீத பாடல்களைப் பாடினர். மறைந்த முரசு ஆனந்தின் மனைவி முனைவர் அருட்செல்வி மற்றும் அவரது குழந்தைகள் மகரந்தன், மேதினி ஆகியோரும் கலந்துகொண்டு பறை இசைத்து கலைஞர் ஆனந்தை நினைவுகூர்ந்தனர். நிகழ்ச்சி உணர்வுபூர்வமாகவும், சமூக நீதி மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வை வலியுறுத்தும் வகையிலும் நடைபெற்றது.

வழக்கறிஞர்.சி.சே.இராசன் தலைவர் சமம் குடிமக்கள் இயக்கம் ஆலோசனைகள் பெற 9984368521 தொடர்பு கொள்ளவும்


Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certified
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.



Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும் தெய்வம்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


S.R
Call Drivers Travels
Man Power & All Vehicle Available
24 Hours
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

# கவிதை அரங்கம்!





என்னை மறந்து
கொஞ்ச நேரம்
உலகை ரசிக்க
நினைத்தால்
அங்கும் வந்துவிடுகிறாய்
நானே...
உன் உலகமென்று

கொஞ்சும்
மொழியில்
கெஞ்சும்
உன் வார்த்தைகளில்

என் கோபங்களும்
மறைந்து விடுகிறது

மழைச்சாரலாய்
நீவர கவிச்சோலையானேன்
நான்...!

மனதிலிருக்கும்
ஆசைகளையெல்லாம்
கொட்டி தீர்த்தவன்
அயர்ந்து போனான்
குழந்தையாய்...!

# வாழ்க்கை தத்துவம்...



வாழ்க்கை ஒரு இசை
அதை ரசித்தால் மகிழ்ச்சி
மறுத்தால் கவலை

தடைகள் வருவது இயற்கை
அதைத் தாண்டி வருவதுதான் வீரம்
உங்கள் சிறகுகள் விரிந்தால்
வானமும் உங்களுக்குச் சொந்தம்

வாழ்க்கை ஒரு பயணம்
எதிர்பாராத திருப்பங்கள் நிறைந்தது
மகிழ்ச்சியாகவும் துன்பமாகவும்
மாற்றங்கள் கண்டு துவண்டு விடாமல்
புன்னகையோடு எதிர்கொள்வோம்

புதிய பாதைகளைத் தேடுங்கள்
தடைகளைத் தாண்டிச் செல்லுங்கள்
அனுபவங்களை சேகரியுங்கள்
வாழ்க்கையை வாழுங்கள்

# "வினைகளின் விளைவு"




கோயில் உண்டியல் உடைக்கப்பட்ட இரவு, வெற்றிகரமாகத் தான் அதை நடத்தி முடித்து விட்டோமென்று முத்து பெருமிதப் பட்டுக் கொண்டிருந்தான்.

அடுத்த நாள் மாலை.

முத்துவின் வீட்டு வாசலில் கோயில் நிர்வாகி நின்றிருந்தார்.

வெலவெலத்துப் போனான் முத்து.

"நேத்து ராத்திரி கோயிலுக்குள் போனது நீ தானே?" அதட்டலாய்க் கேட்டார்.

முத்துவின் தொண்டை வறண்டு போனது. நெற்றியில் வியர்வை ஆறு.

மொபைலில் இருந்த அந்த சிசிடிவி வீடியோ ஓடியது.

தலையில் கையை வைத்துக் கொண்டான் முத்து

"இதை நான் போலீஸ்ல கொடுத்தா உன் வாழ்க்கை முடிஞ்சுடும்," என்று நிர்வாகி மெதுவாகச் சொன்னார்.

"ஐய்யோ... வேண்டாங்க ஐயா... வேண்டாங்க ஐயா" கெஞ்சினான் முத்து.

"சரி... உன்னைப் பார்த்தாலும் பாவமாயிருக்கு... நான் போலீஸுக்குப் போகலை... மரியாதையா எடுத்ததையெல்லாம் என் கிட்டே குடுத்துடு.... நான் கொண்டு போய் சத்தமில்லாமல் உண்டியல்ல வெச்சிடறேன்" என்றார் நிர்வாகி.

அடுத்த நிமிடமே அவன் மொத்தப் பணத்தையும் நிர்வாகியின் கையில் வைத்தான். "இவ்வளவுதானுங்க ஐயா..."

"எதையும் மறைக்கலையே?'"

"சத்தியமா இல்லைங்க ஐயா"

அவர் சென்றதும் முத்துவுக்கு நிம்மதியாயிருந்தது.

மூன்றாம் நாள் போலீஸ் ஜீப் முத்துவின் வீட்டை நோக்கி வந்தது.

"முத்து... கோயில் கொள்ளை சம்பந்தமா உன்னை கைது செய்றோம்."

அவன் திகைத்தான்.

"சார்... நான்... திருப்பி"

அவனைக் கையமர்த்திய போலீஸ் அதிகாரி மொபைல் காட்டினார். CCTV காட்சி.

திருடும் முத்து.

திருப்பிக் கொடுக்கும் காட்சி இல்லை.

நிர்வாகி கொடுத்த புகார். "எடுத்த பணம் இன்னும் திரும்பவில்லை" என்று.

முத்துவின் கண்கள் வெறித்தன.

நிர்வாகி நல்ல பிள்ளை போல் கூட்டத்தில் நின்று கொண்டிருந்தார்.

அந்த நொடியில் முத்துவுக்கு புரிந்தது.

செய்த வினைகளின் விளைவு நிச்சயம் துரத்தும். இன்று என்னைத் துரத்துகிறது. நாளை அந்த நிர்வாகியைத் துரத்தும்.

(முற்றும்)

முகில் தினகரன்
கோயமுத்தூர்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஆசிரியரும் மாணவனும் பேசிக்கொண்டது;*
*நம்ம பள்ளியில் மொத்தம் 5 மாடிகள் இருக்கு.*
*ஒவ்வொரு மாடிக்கும் 15 படிக்கட்டுகள் இருக்கு.*
*ஐந்தாவது மாடிக்கு போகணும்னா எத்தனை படிக்கட்டுக்கள் ஏறணும் ?*
*எல்லா படிக்கடையும் தான் ஏறணும் சார்!*



# தினம் ஒரு சமையல்



## புடலங்காய் கிரேவி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சின்ன புடலங்காய் | -1 |
| சீரகம் | -1ஸ்பூன் |
| பச்சைமிளகாய் | -1 |
| சின்னவெங்காயம் | -4 |
| கருவேப்பிலை | -1 கொத்து |
| உப்பு | -தேவைக்கு |
| சமையல்எண்ணெய் | -தேவைக்கு |
| கடலைப்பருப்பு | -2 ஸ்பூன் |
| மஞ்சள்பொடி | -கால்ஸ்பூன் |

செய்முறை:



முதலில் புடலங்காய்,வெங்காயம் கட்பண்ணிக்கொள்ளவும். புடலங்காய், கடலைப்பருப்பை வேகவைக்கவும்.சிறிது மஞ்சள்பொடி சேர்த்துக்கொள்ளலாம். தேங்காய், சீரகம், பச்சைமிளகாய் எடுத்துவைக்கவும்.

மூன்றையும் அரைத்துக்கொள்ளவும். வேகவைத்த புடலங்காயுடன் அரைத்த விழுதைச்சேர்க்கவும்.

நன்கு கொதிக்கவிடவும்.பின் வேறுவாணலியில் எண்ணெய்ஊற்றி கடுகு, உளுந்தம்பருப்புதாளிக்கவும்.

அதில்கட் பண்ணிய வெங்காயம், கருவேப்பிலை சேர்க்கவும். பின்தேங்காய் சேர்த்துவேகவைத்த புடலங்காயுடன் வதக்கிய வெங்காயத்தைச் சேர்க்கவும்.

நல்ல கிரேலி பதம் வந்ததும் இறக்கிவிடவும். சாம்பார்சாதத்துக்கு நன்றாகஇருக்கும். இதை சாதத்துடன் பிசைந்துசாப்பிடலாம்.அருமையாகஇருக்கும்.செய்துபாருங்கள். நன்றி. மகிழ்ச்சி.

# மாங்காய் இஞ்சி பயன்கள்



மா இஞ்சி (MANGO GINGER) மாங்காய் வாசனையுடன் கூடிய, இஞ்சி போன்ற தோற்றமுடைய ஒரு மருத்துவ குணம் மிக்க வேர்த்தண்டு ஆகும். இது செரிமானத்தை மேம்படுத்துதல், வயிற்று உப்புசம் மற்றும் வாயுத் தொல்லையை நீக்குதல், பசியைத் தூண்டுதல், மூட்டு வலி மற்றும் வீக்கத்தைக் குறைத்தல், மற்றும் தோல் வியாதிகளை குணப்படுத்துதல் போன்ற முக்கிய ஆரோக்கிய நன்மைகளை வழங்குகிறது.

மா இஞ்சியின் முக்கிய பயன்கள்:

செரிமானம் மற்றும் வயிறு: அஜீரணக் கோளாறுகளைச் சரிசெய்து, வயிற்று உப்புசம், வாயுத் தொல்லை மற்றும் வயிற்று வலியை நீக்குகிறது. பசியைத் தூண்டுகிறது.

மூட்டு வலி மற்றும் அழற்சி: இயற்கையான அழற்சி எதிர்ப்பு (ANTI-INFLAMMATORY) பண்புகளைக் கொண்டுள்ளதால், மூட்டு வலி, கீல்வாதம் மற்றும் வீக்கத்தைக் குறைக்க உதவுகிறது.

சரும ஆரோக்கியம்: கிருமிநாசினி பண்புகளைக் கொண்டிருப்பதால், தோல் வியாதிகள், அரிப்பு, மற்றும் முகப்பருவைக் குணப்படுத்த பயன்படுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தி: ஆன்டி-ஆக்ஸிடன்ட் நிறைந்த இது, உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

சுவாசப் பிரச்சனைகள்: ஆஸ்துமா மற்றும் இருமல் போன்ற சுவாசக் கோளாறுகளுக்கு நிவாரணம் அளிக்கிறது.

சமையல் பயன்பாடு: மாங்காய் சுவை கொண்டதால், ஊறுகாய், சட்னி மற்றும் குழம்பு வகைகளில் சுவையூட்டியாகப் பயன்படுத்தப்படுகிறது.

பயன்படுத்தும் முறை:


பச்சையாகவோ, சாலட் வடிவிலோ உண்ணலாம்.

ஊறுகாய் (PICKLE) போட்டு பயன்படுத்தலாம்.

துவையல் அல்லது சட்னி செய்து சாப்பிடலாம்.

குறிப்பு: மருத்துவ குணங்கள் அதிகம் இருந்தாலும், அளவோடு உட்கொள்வது சிறந்தது.

# நடிகர் மம்மூட்டியின் உடல்நலன் பாதிப்பு.. முக்கிய விஷயங்களை இழந்துவிட்டார்!! ஆனால்



மலையாள திரையுலகில் டாப் நடிகராக ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருகிறார் மம்மூட்டி. இவர் திடீர் உடல்நலக் குறைவு காரணமாக 2025ஆம் ஆண்டில் சினிமாவிலிருந்து சில காலம் விலகி இருந்தார்.

இந்த நிலையில், மருத்துவமனை ஒன்றில் நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மம்மூட்டி, உடல்நலக் குறைவான அந்த சமயத்தில் தனக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து முதல்முறையாக பொதுவெளியில் பேசியுள்ளார்.

அவர் பேசுகையில், "கண் பார்வையும் கேட்கும் திறனும்தான் மனித வாழ்க்கையில் மிக முக்கியமானவை. எனக்கு நீண்ட காலமாக வாசனை மற்றும் சுவை அறியும் திறன் இல்லாமல் இருந்தது. எதனையும் என்னால் முகர முடியவில்லை. அதேபோல் உணவின் சுவையும் தெரியவில்லை. இப்போதுதான் அது மெதுவாக திரும்பி வருகிறது. ஒரு விஷயத்தை நாம் இழக்கும் போதுதான் அதனுடைய மதிப்பை உணர்கிறோம்" என கூறினார்.

சுமார் ஓராண்டு காலம் சிகிச்சைக்கு பின் நடிகர் மம்மூட்டி இப்போது மீண்டும் நடிக்க தொடங்கியுள்ளார் என கூறப்படுகிறது. அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததாக செய்திகள் வெளியானாலும், அது குறித்து அதிகாரப்பூர்வ தகவல்கள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.






இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை காவ்யா, தற்போது மகாராணி போல் வேடமிட்டு போட்டோஷூட் நடத்தியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன. இதோ பாருங்க:

# ஹிப்ஹாப் தமிழா ஆதியின் மொத்த சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா? இதோ முழு விவரம்



இண்டிபெண்டெண்ட் ஆர்டிஸ்ட்டாக தனது பயணத்தை தொடங்கி பின் படங்களில் இசையமைப்பாளராக களமிறங்கி, அதன்பின் தனது முதல் படத்திலேயே ஹீரோவாக மாஸ் காட்டியவர் ஹிப்ஹாப் தமிழா ஆதி.

மீசைய முறுக்கு, நட்பே துணை, அன்பறிவு, PT சார் போன்ற படங்கள் இவர் நடிப்பில் வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்றன. இதை தொடர்ந்து தற்போது மீசைய முறுக்கு 2 படத்தில் ஆதி நடித்து வருகிறார்.

நடிப்பை தாண்டி இவருடைய இசைக்குத்தான் ரசிகர்கள் அதிகம். ஆம்பள, தனி ஒருவன், கவண், இன்று நேற்று நாளை, இமைக்கா நொடிகள், அரண்மனை என பல சூப்பர்ஹிட் ஆல்பம் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக மீண்டும் தனது சூப்பர்ஹிட் காம்போவான இயக்குநர் சுந்தர் சி மற்றும் விஷாலுடன் புருஷன் என்கிற படத்திற்காக ஆதி கைகோர்த்துள்ளார். இப்படத்தின் புரோமோ வீடியோ சமீபத்தில் வெளிவந்து அமோக வரவேற்பை பெற்றது.

இன்று ஹிப்ஹாப் ஆதியின் பிறந்தநாள். தனது 36வது பிறந்தநாளை கொண்டாடும் ஆதிக்கு ரசிகர்கள் தங்களது வாழ்த்துகளை சமூக வலைத்தளங்கள் மூலம் தெரிவித்து வருகிறார்கள்.

இந்நிலையில், ஹிப்ஹாப் ஆதியின் சொத்து மதிப்பு குறித்து விவரம் வெளியாகியுள்ளது. அதன்படி, இவருடைய மொத்த சொத்து மதிப்பு ரூ. 35 கோடி முதல் ரூ. 40 கோடி வரை இருக்கும் என்கின்றனர். மேலும் இவர் ஒரு படத்திற்காக ரூ. 3 கோடி முதல் ரூ. 7 கோடி வரை சம்பளமாக வாங்கி வருகிறாராம்.

# அக்ஷதை (அட்சதை) மகிமை

நாம் பூஜைகளின் போது பயன்படுத்துகின்ற மங்கல "அக்ஷதை"யைப் (அட்சதை) பற்றியும் அதன் மகத்துவங்களைப் பற்றியும் அறிந்து கொள்வோம் வாருங்கள்.

"அப்படி என்ன விசேஷம் இருக்கிறது இந்த அக்ஷதைக்கு" ?

இறை பூஜைகளிலும், திருமணங்களிலும், சுப நிகழ்வுகளிலும், இதற்கென ஏன் ஒரு தனியிடமே அளிக்கப்பட்டிருக்கிறது? இதன் "தாத்பர்யம்" (அர்த்தம்) என்ன? என்பதையெல்லாம் சற்று புரிந்து கொள்ள முற்படுவோமா?

"க்ஷதம்" என்ற வார்த்தைக்கு "குத்துவது" அல்லது "இடிப்பது" என்று பொருள். "அக்ஷதம்" என்றால் இடிக்கப்படாதது என்று பொருள். உலக்கையால் இடிக்கப்படாத, முனை முறியாத அரிசி "அக்ஷதை" எனப்படுகிறது. முனை முறிந்த அரிசியைக் கொண்டு "அக்ஷதை" தயாரிப்பது உசிதமல்ல என்பது பெரியோர்களின் வழக்காகும். இப்படி முனை முறியாத



அரிசியோடு மஞ்சளை இணைப்பது ஏன்? பூமிக்கு மேல் விளையும் பொருள் அரிசி. பூமிக்குக் கீழ் விளையும் பொருள் மஞ்சள். இவை இரண்டையும் இணைக்கப் பயன்படுவது தூய பசுநெய் என்கிற ஊடகம். எதற்கு இப்படிச் செய்கிறார்கள்? சந்திரனின் அம்சம் கொண்ட அரிசி, குருவின் அம்சம் கொண்ட மஞ்சள், மஹாலக்ஷ்மியின் அருள்கொண்ட நெய் இவை யாவும் ஒன்று சேரும்போது, அங்கே நல்ல அதிர்வு உண்டாகி, அந்த இடமே சுபிட்சமாகும் என்பது நம்பிக்கை.

வெள்ளை அரிசியோடு மஞ்சள் நிறம் சேர்ந்து நெய்யின் மினுமினுப்போடு விளங்கும் இந்த அக்ஷதை, பெரியோர்களின் ஆசிகளைச் சுமந்து வரும் வாகனமாகவே உணரப்படுகிறது. அதன்றியும், அரிசியை உடலாகவும், மஞ்சளை ஆன்மாவாகவும், நெய்யை தெய்வ சக்தியாகவும் ஆன்றோர்கள் குறிப்பிடுகிறார்கள். இப்படி, "உடல், ஆன்மா, தெய்வசக்தியோடு இணைந்து வாழ்த்துகிறோம்" என்ற பொருளிலேயே அக்ஷதை தூவப்படுகிறது என்று சொல்வோரும் உண்டு.

திருமணங்களில், மணமக்களை வாழ்த்துவதற்கு, மலர்களை விட, அக்ஷதைக்கே முக்கியத்துவம் ஏன் வழங்கப்படுகிறது?

சற்றே யோசித்தால், பூமிக்கு மேலேயும், பூமிக்கு கீழேயும் விளைகின்ற அரிசியையும் மஞ்சளையும் போன்றே மணமக்கள் இரு மாண்பினர். வெவ்வேறு குணநலன்கள் கொண்டவர்கள்.. ஒருமித்து வாழ விழைபவர்கள். அரிசியும் மஞ்சளுமான மணமக்களை இணைக்கும் பசுநெய்யாகப் பாசமிகு உற்றார் உறவினர்கள் உள்ளனர். இதுவே தத்துவம். ஆகவே, உற்றார் உறவினர்கள், பெரியோர்கள், நண்பர்கள் என அனைவரும் மணமக்களை வாழ்த்தும்போது, மணமேடைக்கு அருகே வந்து, ஒருவர் பின் ஒருவராக, மணமக்கள் சிரசில் அக்ஷதை தூவி வாழ்த்துவதே சாஸ்திர ரீதியாகச் சிறந்தது என்பர் பெரியோர். இதை வீசி எறிவது தவறான விஷயம். திருமணக் கூடங்களில் எங்கோ இருந்து கொண்டு, வீசி எறிவதைப் பார்க்கிறோம். அது ஆகாத செயலாகும். அக்ஷதையைப் போல முழுமையாக எல்லா நிகழ்வுகளும், திருமணம் கண்டவர்களின் வாழ்விலும் நடைபெற வேண்டும் என்பதே அக்ஷதையின் குறியீடு. இப்படிப்பட்ட அக்ஷதையை இறைவன் திருவடிகளில் வைத்து வணங்கிய பின்னர், மணமக்களை ஆசீர்வதித்து அவர்கள் சிரசில் தூவுவதே, அவர்களுக்கு நன்மையான பலன்களைக் கொடுக்கும். அதே போன்று புதிதாகத் தொழில் துவங்கும் போதும், சந்திரன் சக்தி அதிகம் அமைந்த அரிசியும், குருபகவானின் சக்தி அதிகம் அமைந்த மஞ்சளும், மஹாலக்ஷ்மியின் பரிபூரண சக்தி கொண்ட நெய்யினால் சேர்த்து, பெரியோர்களால் அக்ஷதையாகத் தூவப்பட்டு ஆசி வழங்கப்படும் பொழுது, அந்தப் புதிதாகத் தொடங்கப்பட்ட தொழில் வாழையடி வாழையாக அவர்களுக்கு அதிர்ஷ்டத்துடன் கூடிய நன்மைகளை விளைவிக்கும் என்பது சாஸ்திர ரீதியான உண்மையாகும்.



**ப.கோபிபச்சமுத்து**
புதுப்பேட்டை, கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் — மூவலூர் ராமாமிர்தம் வரலாறு

மூவலூர் ராமாமிர்தம் (1883 1962) தமிழகத்தைச் சேர்ந்த ஓர் பெண் சமூக சீர்திருத்தவாதி, எழுத்தாளர், முன்னாள் தேவதாசி ஒழிப்பு இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர்.

இவர் திருவாரூர் மாவட்டம் கீரனூர் என்ற இடத்திற்கு அருகில் உள்ள "பாலூர்" என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் வளர்ந்தது மூவலூர் கிராமம் இதனால் இவர் மூவலூர் இராமாமிர்தம் என்று அழைக்கப்படுகிறார்.

இவர் சென்னை மாகாணத்தில் தேவதாசி முறையை ஒழிக்கப் பாடுபட்டவர். 1936 இல் வெளியான இவரது சுயசரிதப் புதினமான தாசிகளின் மோசவலை அல்லது மதி பெற்ற மைனர், தாசிகளின் அவலநிலையை



வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தது. முதலில் இந்திய தேசிய காங்கிரசின் ஆதரவாளராக இருந்த இவர் 1925 இல் பெரியார் (ஈ. வெ. ராமசாமி) காங்கிரசிலிருந்து விலகியபோது பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். 1930 இல் சென்னை மாகாணத்தில் தேவதாசிமுறை ஒழிப்பை சட்டமாகக் கொண்டுவர டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி முயன்றபோது அவருக்குத் துணை நின்றார். ஆனால் அச்சமயம் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. 1937 முதல் 1940 வரை நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டார். நவம்பர் 1938 இல் அதற்காக ஆறு வாரங்கள் சிறையிலடைக்கப்பட்டார். அவரது புதினம் மக்களிடையே ஏற்படுத்திய விழிப்புணர்வும் தேவதாசி முறையை ஒழிக்க அவர் மேற்கொண்ட தொடர் பிரச்சாரங்களும் சென்னை தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் நிறைவேற வழிவகுத்தன. அச்சட்டம் 1947லிருந்து தேவதாசி முறையை ஒழித்தது. 1949 இல் பெரியார் மணியம்மை திருமணம் காரணமாக ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அண்ணாத்துரை திராவிடர் கழகத்தை விட்டு விலகும் போது அவருடன் இராமாமிர்தம் அம்மையாரும் திராவிடர் கழகத்தை விட்டுவிலகினார். அதன்பிறகு சி. என். அண்ணாத்துரை ஆரம்பித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளரானார். 27.06.1962 இல் அவர் காலமாகும்வரை தி.மு.க ஆதரவாளராகவே இருந்தார். 1989-ஆம் ஆண்டு கலைஞர் திரு. மு.கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு 8-ஆம் வகுப்பு வரை படித்த இளம் பெண்களின் திருமண நிதி தொகை ரூபாய் 5000-த்தை 15000 பெண்களுக்கு வழங்க முடிவு செய்தது அதற்கு அம்மையாரின் நினைவாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம் என்று பெயரிடப் பட்டது

## சந்திரசேகர் ராவ் மகள் கவிதா புதிய கட்சி தொடங்குகிறார்!





**தெலங்கானா, பிப்.21:**

தெலங்கானா முன்னாள் முதல்வர் சந்திரசேகர் ராவின் மகள் கவிதா புதிய கட்சியைத் தொடங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

தெலங்கானா முன்னாள் முதல்வரும், பாரதிய ராஷ்டிரிய சமிதி கட்சியின் தலைவருமான சந்திரசேகர் ராவின் மகள் கவிதா கடந்த 2025 ஆம் ஆண்டு அக்கட்சியில் இருந்து விலகினார்.

இந்த நிலையில், வியாழக்கிழமை (பிப். 19) செய்தியாளர்களுடன் பேசிய கவிதா, வரும் மே மாதம் முதல் வாரத்தில் வரும் முகூர்த்தத்தில் தான் புதிய கட்சியைத் துவங்குவதாகவும், அக்கட்சியின் பெயரில் தெலங்கானா எனும் வார்த்தைஇடம்பெற்றிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தெலங்கானாவின் அடுத்த சட்டப்பேரவைத் தேர்தலில் சித்திப்பேட்டைஅல்லதுபோதன் ஆகிய தொகுதிகளிலிருந்து போட்டியிடப்போவதாக அவர் அறிவித்துள்ளார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் சுமார் 20 ஆண்டுகளுக்குசித்திப்பேட்டை தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராக அவரது தந்தை சந்திரசேகர் ராவ் பதவி வகித்து வந்தார்.

முன்னதாக, பாரதிய ராஷ்டிரியசமிதிகட்சிக்குஎதிரான நடவடிக்கையில்ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு கவிதா அக்கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். இதையடுத்து, அவர் அந்தக் கட்சியிலிருந்து அதிகாரப்பூர்வமாக விலகியது குறிப்பிடத்தக்கது.

## வங்கதேச வான்வழியில் பறக்க ஸ்பைஸ் ஜெட் விமானங்களுக்குத் தடை!

**புதுடெல்லி, பிப்.21:**

வங்கதேச அரசுக்கு நிலுவைத் தொகையைச் செலுத்தாததால், அந்நாட்டின் வான்வழியைப் பயன்படுத்த ஸ்பைஸ் ஜெட் நிறுவனத்துக்குச்சொந்தமான விமானங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, வங்கதேச வான்வழிப்பாதை முடக்கப்பட்டதால், ஸ்பைஸ் ஜெட் நிறுவனத்தின் சில விமானங்கள் மிக நீண்ட மாற்றுப்பாதைகளில் பறக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், கொல்கத்தாவில் இருந்து குவாஹட்டி போன்ற நகரங்களுக்கு மாற்றுப்பாதையில் செல்லும் விமானங்களின் பயணம் அதிக நேரம் எடுப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த விவகாரம் வழக்கமானது என்றும், இதுகுறித்து வங்கதேச அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் ஸ்பைஸ் ஜெட் நிறுவனத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த நடவடிக்கைகளுக்கான முழுமையான காரணம் குறித்து வங்கதேச அரசிடமிருந்து எந்தவொரு தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. ஆனால்,மீதமுள்ளநிலுவைத் தொகையைச்செலுத்தாததே அதற்கான காரணம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னதாக, 2025 டிசம்பர் வரையிலான வெறும் மூன்று மாதகாலத்தில் ரூ. 267.27 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக, ஸ்பைஸ் ஜெட் நிறுவனம் கடந்த வாரம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## உ.பி.யில் 2027 தேர்தலில் ஒவைசி கட்சி 200 தொகுதிகளில் போட்டி

**புதுடெல்லி, பிப்.21:**



வரும் 2027ம் ஆண்டு உ.பி. சட்டப்பேரவை தேர்தலில் ஒவைசி கட்சி 200 தொகுதிகளில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. இதன் காரணமாக, சமாஜ்வாதி, காங்கிரஸுடன் ஆளும் பாஜகவும் வாக்குகளை இழக்கும் அபாயம் உள்ளது.


ஏஐஎம்ஐஎம் கட்சியின் தேசியத் தலைவரும் ஹைதராபாத் எம்.பி.யுமான அசதுதீன் ஒவைசியின் செயல்பாடுகள், உ.பி. அரசியல் கட்சிகளிடையே பதற்றத்தை தூண்டியுள்ளது. இவர் எத்தனை தொகுதிகளில் போட்டியிட்டாலும் அவற்றில் சிறுபான்மையினர் வாக்குகளை பறித்து விடும் அபாயம் அக்கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இவற்றில் காங்கிரஸ் கட்சி மிகப்பெரிய கவலையில் இருப்பதாக தெரிகிறது.

முஸ்லிம் வாக்குகளின் பிளவால் ஏற்கெனவே பலவீனமான தனது சிறுபான்மையினர் ஆதரவு தளத்தை இது மேலும் குறைக்கக்கூடும் என காங்கிரஸ் அஞ்சுகிறது.

2022 சட்டப்பேரவை தேர்தலில் கூட, காங்கிரஸ் கட்சி முஸ்லிம் வாக்குகளில் குறிப்பிடத் தக்க பங்கைப் பெறவில்லை. எனவே உ.பி.யில் ஏஐஎம்ஐஎம் போட்டியால், காங்கிரஸுக்கான வாக்குகள் மேலும் குறையும் வாய்ப்புகள் உள்ளன. முக்கிய எதிர்க் கட்சியான சமாஜ்வாதியின் நிலைமை சற்று வித்தியாசமாக உள்ளது. 2022 தேர்தலில் சுமார் 79 முதல் 83% முஸ்லிம் வாக்குகளை அக் கட்சி பெற்றுள்ளது. 2024 மக்களவைத் தேர்தலில் சமாஜ்வாதி வாய்ப்பளித்த 4 முஸ்லிம் வேட்பாளர்களும் வெற்றி பெற்றனர். உ.பி.யில் ஏஐஎம்ஐஎம் கட்சியின் செல்வாக்கு வளர்ந்தாலும் தங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் வலுவானக் கூட்டணியால் சிறுபான்மையினர் வாக்குகளை ஓரளவு பாதுகாக்கலாம் என சமாஜ்வாதி நம்புகிறது.

## இந்தியப் பயணத்தை நிறைவு செய்து புறப்பட்டார் பிரான்ஸ் அதிபர்!

**புதுடெல்லி, பிப்.21:**



மும்பையைத் தொடர்ந்து, தில்லி சென்ற பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் தனது இந்தியப் பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

தில்லியில் நடைபெறும் செய்யறிவு உச்சி மாநாட்டில் பங்கேற்க மத்திய அரசின் அழைப்பில் பேரில், பிரேசில், ஸ்பெயின், கஜகஸ்தான் உள்ளிட்ட ஏராளமான நாடுகளின் தலைவர்கள் இந்தியா வந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் மற்றும் அவரின் மனைவி பிரிஜிட் மேக்ரான் ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை (பிப். 17) மும்பை வந்தடைந்தனர்.

மும்பையில், பிரான்ஸ் அதிபர் மேக்ரான் இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்துவது குறித்து பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இந்தச் சந்திப்பில், இருநாடுகளுக்கு இடையிலான முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதையடுத்து, அதிபர் மேக்ரான் அவரது மனைவியுடன் புகழ்பெற்ற வரலாற்று சின்னமான சத்ரபதி சிவாஜி ரயில் நிலையத்தைசெவ்வாய்க்கிழமை இரவு நேரில் பார்வையிட்டார்.

பின்னர், மும்பையிலிருந்து விமானம் மூலம் புதன்கிழமை தில்லி வந்தடைந்த அதிபர் மேக்ரான் இன்று நடைபெற்ற செய்யறிவு உச்சி மாநாட்டில் கலந்துகொண்டார். மேலும், மாநாட்டின் ஒருபகுதியாக பிரதமர் மோடியுடன் அவர் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த பிப்.17 ஆம் தேதி முதலான தங்களது இந்தியப் பயணத்தை நிறைவு செய்த பிரான்ஸ் அதிபர் மேக்ரான் மற்றும் அவரின் மனைவி பிரிஜிட் ஆகியோர் இன்று மாலை பிரான்ஸ் புறப்பட்டுச் சென்றனர். அவர்களை மத்திய வெளியுறவு இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் நேரில் சென்று வழியனுப்பினார்.

## ஆதார் கார்டில் புதிய மாற்றங்களை கொண்டு வர திட்டம்!

**புதுடெல்லி, பிப்.21:**

இந்தியாவில் ஆதார் கார்டு முக்கிய ஆவணமாக இருக்கிறது. 12 இலக்க எண்களை கொண்ட ஆதார் கார்டில் ஒருவரின் பெயர், முகவரி, வயது, தந்தை பெயர் உள்ளிட்ட விவரங்கள் இடம் பெற்றிருக்கும். அரசின் நலத்திட்டங்கள், பள்ளிகளில் குழந்தையை சேர்க்க வேண்டும் என்றாலும் கூட ஆதார் கார்டு விவரங்களே பிரதானமாக கேட்கப்படுகிறது. இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) ஆதார் அட்டையை வழங்கி வருகிறது. ஆதார் கார்டை 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிப்பது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதாரில் உள்ள விவரங்கள் தேவையின்றி மற்றவர்களுக்கு தெரிவதைத் தடுக்க புதிய அப்டேட்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இதன்படி, ஆதார் அட்டையில் உள்ள விவரங்கள், புகைப்படங்களை தவறாக பயன்படுத்துவதைத் தடுக்க, ஆதாரில் புகைப்படம், முகவரி போன்றவை இருக்காத வகையில், புதிய ஆதார் அட்டையை ஆதார் ஆணையம் கொண்டு வர உள்ளது.

தற்போது ஆதார் அட்டையில் பெயர், முகவரி, பிறந்த தேதி, ஆதார் எண் போன்ற விவரங்கள் உள்ளன. எனவே இவற்றை நகல் எடுத்து கொடுத்தால் அதை பெறுபவர்களுக்கு தனிப்பட்ட விவரங்கள் தெரிகிறது. இது எளிதில் தவறாக பயன்படுத்தப்படலாம்.

இதனைத் தடுக்கும் விதமாக, ஆதார் அட்டையில் புகைப்படம் மற்றும் க்யூஆர் கோடு மட்டும் அட்டையில் தெரியும் வகையில் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் வடிவமைக்க திட்டமிட்டுள்ளது.

க்யூஆர் கோடு மூலம் ஸ்கேன் செய்து, சம்பந்தப்பட்டவர்களின் விவரங்களை சரிபார்க்க முடியும். இந்த புதிய மாற்றம் எப்போது கொண்டு வரப்படும் என அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை. இது பயன்பாட்டுக்கு வந்தால் மோசடிகள் தடுக்கப்படும் என்று தெரிகிறது.

## 'அதிக வேலைவாய்ப்புகளை செயற்கை நுண்ணறிவு உருவாக்கும்' - டாடா குழும தலைவர்

**புதுடெல்லி, பிப்.21:**

டெல்லியில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டை பிரதமர் மோடி இன்று தொடங்கி வைத்தார். இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக 20 நாடுகளின் தலைவர்கள், 60 மந்திரிகள் உள்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட அரசாங்க பிரதிநிதிகள் நேற்று டெல்லிக்கு வந்தனர்.

அதேபோல் தொழில் அதிபர்கள், பிரபல நிறுவனங்களின் நிர்வாகிகள் என 500-க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைவர்கள் வந்துள்ளனர். மேலும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டரெஸ், ஸ்பெயின் அதிபர் பெட்ரோ சான்செஸ், தொழில் அதிபர் முகேஷ் அம்பானி, கூகுள் சி.இ.ஓ. சுந்தர் பிச்சை உள்ளிட்ட பிரபல நிறுவனங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் டாடா குழும தலைவர் என். சந்திரசேகரன் இன்று செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார்.

இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியளித்தபோது கூறியதாவது;- "செயற்கை நுண்ணறிவு துறையில் இந்தியாவுக்கு பல வழிகளில் மிகப்பெரிய வாய்ப்பு இருப்பதாக நான் நினைக்கிறேன். அதற்கு நாம் தயாராக இருக்கிறோம். சிப்களில் முதலீடுகள், பசுமை எரிசக்தியில் முதலீடுகள் மற்றும் ஏ.ஐ. மிஷன் என பல விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசாங்கத்திற்கும், பிரதமர் மோடிக்கும் நான் பாராட்டுகளை தெரிவிக்க விரும்புகிறேன்.

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு துறைக்கு மட்டுமானதல்ல. அதன் தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடுகள் பல துறைகளுக்கு பரவி, அதை ஒரு மாற்றும் சக்தியாக மாற்றுகிறது. ஏ.ஐ. என்பது ஒரு பரிமாணம் அல்ல, அது பல பரிமாணம் கொண்டது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஏ.ஐ. பயன்பாட்டுக்கு 5 அம்ச தொலைநோக்குப் பார்வை: டில்லி மாநாட்டில் முன்வைத்தார் பிரதமர் மோடி




**புதுடெல்லி, பிப்.21:**

செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்ப பயன்பாட்டில் மக்களை மையப்படுத்திய அணுகுமுறைக்காக, இந்தியாவின் 5 அம்ச 'மானவ்' தொலைநோக்குப் பார்வையை முன்வைத்து, எடுத்துரைத்தார் பிரதமர் மோடி.

இது தொடர்பாக, தில்லி ஏ.ஐ. தாக்க உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், 'ஏ.ஐ. தொழில்நுட்ப பயன்பாட்டில் தேசிய இறையாண்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அந்த வகையில், இந்தியா சார்பில் 'மானவ்' தொலைநோக்குப் பார்வையை முன்வைக்கிறேன். இது, தார்மிக நெறிமுறை, பொறுப்பான நிர்வாகம், தேசிய இறையாண்மை, அனைவருக்குமான அணுகல்- உள்ளடக்கம், சட்டப்பூர்வ பயன்பாடு ஆகிய 5 அம்சங்களை உள்ளடக்கியது' என்றார்.

உச்சிமாநாட்டில் உலகத் தலைவர்களின் முழு அமர்வில் பேசிய பிரதமர், 'இந்தியா கடவுள் புத்தரின் புண்ணிய பூமி. சரியான புரிதலில் இருந்தே சரியான செயல் பிறக்கும் என்பது புத்தரின் போதனையாகும். ஏ.ஐ. தொழில்நுட்ப பயன்பாட்டில் நெறிமுறையற்ற செயல்பாடுகளுக்கு வரம்பில்லாத வாய்ப்புகள் உள்ளன.

எனவே, வெளிப்படையான, தெளிவான பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் விதிமுறைகளுக்கான செயல்திட்டத்தை உருவாக்குவது அவசியம். ஏ.ஐ. நிறுவனங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளது. தரவு இறையாண்மை மதிக்கப்படுவதுடன், ஏ.ஐ. பயிற்சிக்கு தெளிவான தரவு கட்டமைப்பு வேண்டும்.

தொழில்நுட்பத்தை அதிகாரத்துக்கான கருவியாக அல்லாமல், சேவைக்கான தளமாக பயன்படுத்துவதால், இந்தியாவில் சமீப ஆண்டுகளில் எண்ம பொது உள்கட்டமைப்பு துடிப்பாக மாறியுள்ளது' என்றார்.

தில்லி உச்சி மாநாட்டில் இந்திய நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏ.ஐ. மாதிரிகள் மற்றும் கைப்பேசி செயலிகளையும் பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார்.

## 'முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ஆட்சியில் அன்னபிரசாதம் தரம் இல்லை'

**திருமலை, பிப்.21:**

திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர்.நாயுடு திருமலையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி ஆட்சியில் லட்டு பிரசாதம் தயாரிப்பதற்கான நெய்யில் மட்டும் கலப்படம் நடக்கவில்லை, அன்னதானப் பொருட்கள் கூட தரமாக இருந்ததில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு லட்டு பிரசாதத்தின் தரம் மட்டுமல்ல, அன்னபிரசாதத்தின் தரமும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

பக்தர்களும் இதனை பல இடங்களில் பதிவு செய்து வருகின்றனர். ஆனால் தேவையில்லாமல் முதல்வர் சந்திரபாபு நாயுடு குடும்ப பால் உற்பத்தி நிறுவனங்கள் மீது ஜெகன் கட்சியினர் வீண் புரளி கிளப்பி வருகின்றனர். அவர்களுக்கு நெய் எது, பாலாடை கட்டி எது என்று கூட தெரியவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## 20,000 ஆசிரியர்கள் பணி நிரந்தரம்!

**கோட்டயம், பிப்.21:**

கேரளாவில் ஆளும் இடதுசாரி ஜனநாயக முன்னணியில் அங்கம் வகிக்கும் கேரள காங்கிரஸ் (எம்) தலைவர் ஜோஸ் கே.மாணி செய்தியாளர்களிடம் கூறியதாவது: அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 20,000 ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என அரசு அறிவித்துள்ளது. குறிப்பாக, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டு, இந்த பணி நிரந்தர நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது" என்றார்.

இதுகுறித்து கேரள கல்வி அமைச்சர் வி.சிவன் குட்டி நேற்று கூறும்போது, "மாற்றுத் திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர் நியமன ஒப்புதல் தொடர்பான நீண்ட கால சட்டச் சிக்கல்களைத் தீர்க்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

## ராஜஸ்தானில் 8 நீதிபதிகள் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்

**புதுடெல்லி, பிப்.21:**

ராஜஸ்தான் மாநில நீதிமன்றங்களில் பணி நேரத்தில் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையை மேற்கொள்ளாமல் தனது அறையில் அமர்ந்திருந்த 8 நீதிபதிகள் காத்திருப்போர் பட்டிலுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மாநில உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி சஞ்சீவ் பிரகாஷ் சர்மா, உயர்நீதிமன்ற வளாகத்தில் பழைய கட்டடத்தில் அமைந்துள்ள நீதிமன்றங்கள் மற்றும் அருகிலுள்ள சில மாவட்ட நீதிமன்றங்களில் நடத்திய திடீர் ஆய்வுக்குப் பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற பதிவாளர் இதுதொடர்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அதில், 'நிர்வாகக் காரணங்களுக்காக 8 நீதிபதிகள் உடனடியாக காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்படுகின்றனர்' என்று தெரிவிக்கப்பட்டது. வேறு காரணங்கள் எதுவும் அதில் குறிப்பிடப்படவில்லை.

## அரிய புவி காந்த உற்பத்தி நடப்பாண்டில் தொடங்கும் : மத்திய அமைச்சர்

**புதுடெல்லி, பிப்.21:**

நியோடைமியம், பிரசியோடைமியம் உள்ளிட்ட அரிய புவி தனிமங்களின் கொள்முதலில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தும் நிலையில், இது தொடர்பான சுரங்கப் பகுதிகள் ஏலமிடப்பட்டு வருகின்றன. இந்தச் சூழலில், மத்திய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

டில்லியில் இந்திய தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்பு (ஃபிக்கி) மற்றும் மத்திய சுரங்கத் துறை சார்பில் வியாழக்கிழமை கருத்தரங்கு நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி பங்கேற்றுப் பேசியதாவது:

அரிய புவி தனிமங்களின் தேவையில் இறக்குமதியை சார்ந்திருப்பதைக் குறைக்க, 'தற்சார்பு இந்தியா' திட்டத்தின்கீழ் மத்திய அரசு தீவிர முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. அதன்படி, அரிய புவி நிரந்தர காந்த உற்பத்தி நடப்பாண்டிலேயே தொடங்கப்பட உள்ளது. இது, மின்வாகன உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகளில் தற்சார்பை உறுதி செய்யும் முக்கிய படிக்கல்லாகும். அரிய கனிமங்களின் உற்பத்தியில் முழுமையான விநியோக சங்கிலியைக் கட்டமைக்க வேண்டும். இல்லையெனில், சுத்திகரிக்கப்பட்ட அரிய கனிமங்களின் தேவையில் நாம் தொடர்ந்து இறக்குமதியைதான் நம்பியிருக்க வேண்டியிருக்கும் என்றார் ஜி.கிஷண் ரெட்டி.

## கிரிக்கெட் மைதானத்தில் புகுந்த தேனீக்கள்: நடுவர் உயிரிழப்பு; விளையாட்டு வீரர்கள் படுகாயம்

**உன்னாவ், பிப்.21:**

உத்தர பிரதேச மாநிலம் உன்னாவ் மாவட்டத்தில் உள்ள கிரிக்கெட் மைதானத்துக்குள் தேனீக்கள் கூட்டம் புகுந்து தாக்கியதில் படுகாயமடைந்த நடுவர் உயிரிழந்தார். கிரிக்கெட் வீரர்கள் படுகாயமடைந்தனர்.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறியதாவது:

உன்னாவ் மாவட்டத்தில் உள்ள மைதானத்தில் கான்பூர் கிரிக்கெட் சங்கம் சார்பில் புதன்கிழமை மாலை கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. கிரிக்கெட் போட்டி நடந்துகொண்டிருந்தபோது, அங்கு வந்த தேனீக்கள் கூட்டம் விளையாடிக் கொண்டிருந்த அனைவரையும் தாக்கியுள்ளது. இதில் படுகாயமடைந்த கான்பூரைச் சேர்ந்த நடுவர் மாணிக் குப்தா சுயநினைவை இழந்தார். தேனீக்கள் தாக்குதலில் விளையாட்டு வீரர்களும் படுகாயமடைந்தனர்.

அவர்கள் அனைவரும் அருகிலுல்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நடுவர் மாணிக் குப்தாவை பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.




# சென்னை | இளம் பெண்ணிடம் போட்டோ ஷூட் எடுப்பதாக நகை திருடிய பிசியோ தெரபிஸ்ட் கைது

**சென்னை, பிப்.21:** திருவண்ணாமலை மாவட்டம், கருடாழ்வார் நகரில் குடும்பத்துடன் வசிப்பவர் லேப் டெக்னீஷியன் புனிதாஸ்ரீ (22). சினிமாவில் நடிக்கும் ஆசையில் இருந்தார். இவரது வீட்டின் கீழ் தளத்தில் கோயம்புத்தூரைச் சேர்ந்த பிசியோ தெரபிஸ்ட் ஜெகதீஸ் (52) மனைவி, மகளுடன் வாடகைக்கு வசித்து வருகிறார்.

போட்டோ ஷூட் எடுத்து அந்த போட்டோ மற்றும் வீடியோக்களை காண்பித்து சினிமா அல்லது டிவி தொடர்களில் நடிக்க வாய்ப்பு கேட்கலாம் என புனிதாஸ்ரீயிடம் ஜெகதீஸ் தெரிவித்துள்ளார்.

இதை நம்பிய புனிதாஸ்ரீ போட்டோ ஷூட் நடத்த ஒப்புக் கொண்டார். இதை யடுத்து, ஜெகதீஸ் அவரை சென்னைக்கு காரில் அழைத்துச் சென்றார். பின்னர் போட்டோ ஷூட்டுக்கு தேவையான புதிய ஆடைகளை வாங்க ராயப்பேட்டையில் உள்ள பிரபல வணிக வளாகத்துக்கு கூட்டிச் சென்றார்.

அங்கு புனிதாஸ்ரீயை ஆடைகளை வாங்க வைத்து, அந்த ஆடைகளை அவர் அணிந்து பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், அவர் ஏற்கெனவே கைப்பையில் வைத்திருந்த 16 பவுன் தங்க நகைகளை நைசாக திருடிக் கொண்டு ஜெகதீஸ் தப்பினார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு இதை கவனித்த புனிதாஸ்ரீ இது தொடர்பாக அண்ணா சாலை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து தலைமறைவான ஜெகதீஸ் மற்றும் திருட்டுக்கு உதவியதாக இருந்த 10-ம் வகுப்பு படித்துவரும் 16 வயது சிறுமி ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

விசாரணையில் ஜெகதீஸ் மற்றும் இளஞ்சிறுமி ஆகியோர் இதேபோல சென்னை சாஸ்திரி நகர், வேளச்சேரி உள்ளிட்ட பல இடங்களில் குடும்பத்துடன் நன்றாக பழகி நம்பிக்கை ஏற்படுத்தி, தங்க நகைகள் மற்றும் செல்போன்களை ஏமாற்றி திருடியுள்ளது தெரியவந்தது.

# சென்னை | வருமானத்துக்கு அதிகமாக 372% சொத்து சேர்த்த பெண் காவல் ஆய்வாளர்: லஞ்ச ஒழிப்பு போலீஸார் வழக்கு

**சென்னை, பிப்.21:** ராஜலட்சுமி என்பவர் சென்னை காவல் துறை பாலியல் தடுப்புப் பிரிவில்(1) ஆய்வாளராக பணிபுரிகிறார். இவர் திருமங்கலம், வெல்கம் காலனியில் குடும்பத்துடன் வசிக்கிறார்.

இவர் பணியின்போது தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி முறைகேடாக அதிகளவில் பணம் சம்பாதித்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதை அடிப்படையாக வைத்து கடந்த 13-ம் தேதி இவரது வீட்டில் லஞ்ச ஒழிப்புப் பிரிவு போலீஸார் சோதனை நடத்தினர்.

முடிவில் பல்வேறு சொத்துகள் தொடர்புடைய முக்கிய ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு போலீஸார் பறிமுதல் செய்து கையோடு எடுத்துச் சென்றனர். இதன் தொடர்ச்சியாக வருமானத்தை விட 372% அதிக சொத்து சேர்த்ததாக ஆய்வாளர் ராஜலட்சுமி மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அதில், "குற்றச்சாட்டுக்கு உள்ளான ஆய்வாளர் ராஜலட்சுமி மது விலக்கு அமலாக்கப் பிரிவு, பொருளாதார குற்றப் பிரிவு, பாலியல் தடுப்புப் பிரிவு, போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போன்ற முக்கியமான இடங்களில் பணிபுரிந்தபோது தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து, 01.06.2017 முதல் 30.06.2025 வரையிலான காலகட்டத்தில், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வாங்கி குவித்திருந்துள்ளார்.

1999-ல் நேரடி எஸ்ஐ-யாக பணியில் சேர்ந்த ராஜலட்சுமி, ஆய்வாளராக பதவி உயர்வு பெற்ற பிறகு, 2010 முதல் சென்னை நகருக்குள் மட்டுமே முக்கியமான இடங்களில் பணிபுரிந்துள்ளார். எனவே அவரது சட்டவிரோத வருவாயைக் கணக்கிட 01.06.2017 முதல் 30.06.2025 வரையிலான காலம் கணக்கிடப்பட்டது.

இந்த காலக்கட்டத்தில் அவர் வருமானத்தை விட ஊழல் மற்றும் சட்டவிரோத வழிகளில் ரூ.5.42 கோடிக்கு சொத்துகளை தனது பெயரிலும், குடும்ப உறுப்பினர்களின் பெயரிலும் வாங்கியுள்ளார்.

அதாவது வருமானத்தை விட 372% அதிகளவில் சொத்து சேர்த்துள்ளார். இதையடுத்து, அவர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாஜக நிர்வாகி அமர்பிரசாத் ரெட்டிக்கு கொலை மிரட்டல்: போலீஸார் தீவிர விசாரணை

**சென்னை, பிப்.21:** வேலூர் மேல்விஷாரத்தை அடுத்த கீழ்விஷாரம் பகுதியில் கடந்த 14-ம் தேதி வேலூர் இப்ராஹிம் தலைமையில் பாஜக தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாஜக மாநிலச் செயலாளர் அமர் பிரசாத் ரெட்டி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்தக்கூட்டத்தில் பங்கேற்ற சில நாட்களிலேயே, அவருக்கு அடையாளம் தெரியாத நபர்களிடமிருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழக டிஜிபி அலுவலகத்துக்கு மின்னஞ்சல் மூலம் மிரட்டல் வந்துள்ளது.

அதில், "முஸ்லிம்கள் எப்போதும்பாஜகவுக்கு வாக்களிக்க மாட்டார்கள். நிகழ்ச்சியில் பங்கேற்ற அமர்பிரசாத் ரெட்டி, பிரதமர் மோடியை ஆதரித்துப் பேசினார். எங்கள் சமூகத்துக்கு எதிராக பேச யாரையும் அனுமதிக்க மாட்டோம்.

கணிக்க முடியாத நேரத்தில் அவரது இல்லத்தில் 2 கிலோ ஆர்டிஎக்ஸை வைப்போம். தமிழகத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக பேச அனுமதி அளித்த போலீஸாருக்கு இது ஒரு சவால்.

உங்களால் முடிந்தால், அமர் பிரசாத் ரெட்டியை காப்பாற்ற முயற்சிக்கவும்" என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மிரட்டல் மின்னஞ்சல் தொடர்பாக தீவிரவாத தடுப்பு பிரிவு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து வேலூர் இப்ராஹிமிடம் கேட்டபோது, "மக்களிடையே நாங்கள் கொண்டு செல்லும் கருத்துகளை பொறுத்துக்கொள்ள முடியாத சில சக்திகள், எனக்கும் அமர் பிரசாத் ரெட்டிக்கும் கொலை மிரட்டல் விடுத்துள்ளன. இது போன்ற மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சப்போவதில்லை. இந்த மிரட்டல்கள் குறித்து விரைவில் டிஜிபி-யிடம் புகார் அளிக்க உள்ளோம்" என்றார்.

# விவசாய தோட்டத்தில் புகுந்து வாழை-தென்னை மரங்களை சேதப்படுத்திய காட்டு யானைகள்



**தாளவாடி, பிப்.21:** ஈரோடு மாவட்டம் தாளவாடி அடுத்த கிராமங்களில் கடந்த சில நாட்களாகவே வனப்பகுதியை விட்டு வெளியேறும் யானைகள் கூட்டம் கிராமங்களுக்குள் புகுந்து விளை நிலங்களை சேதப்படுத்தி வருவது தொடர்கதை ஆகி வருகிறது. குறிப்பாக தென்னை வாழை மரங்களை தின்றும் மிதித்து சேதப்படுத்தி வருகிறது. இதனால் இந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஏற்கனவே நஷ்டத்தில் உள்ளனர்.

இந்நிலையில் நேற்று இரவும் வனப்பகுதியை விட்டு வெளியேறிய யானைகள் கூட்டம் அங்குள்ள விவசாய தோட்டத்துக்குள் புகுந்து வாழைத் தென்னை மரங்களை மீண்டும் சேதப்படுத்தி உள்ளன. இது குறித்த விவரம் வருமாறு:-

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட தாளவாடி அடுத்த சேஷன்நகர் கிராமத்தில் விஜயகுமார் என்பவர் தனது விவசாய நிலத்தில் நூற்றுக்கணக்கில் தென்னை-வாழைகளை பயிரிட்டுள்ளார். அவைகள் நன்கு வளர்ந்து இருந்தது. வனப்பகுதியையொட்டி விளைநிலம் இருப்பதால் இரவு நேரத்தில் விவசாயிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று இரவு வனத்திலிருந்து வெளியேறிய காட்டு யானைக்கூட்டம், விவசாயி விஜயகுமார் நிலத்தில் கம்பி வேலிகளை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து சுமார் 100-க்கும் மேற்பட்ட வாழை மற்றும் தென்னை மரங்களை தின்றும், மிதித்தும் சேதம் செய்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளன. பின்னர் விவசாயிகள் ஒருங்கிணைந்து யானை கூட்டத்தைவிரட்டினர்.

இது குறித்து அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறும்போது,

கடந்த ஒரு வாரமாக யானை கூட்டம் வனப்பகுதியில் இருந்து வெளியேறி எங்கள் கிராமத்துக்குள் புகுந்து தொடர்ந்து தென்னை வாழை மரங்களை தின்றும் மிதித்தும் சேதப்படுத்தி வருகின்றன. மேலும் மக்காச்சோள பயிர்கள் காய்கறிகளையும் சேதப்படுத்தி உள்ளன.

கிட்டத்தட்ட இந்த ஒரு வாரத்தில் மட்டும் 500க்கும் மேற்பட்ட தென்னை-வாழை மரங்கள் சேதம் அடைந்துள்ளன. இதனால் எங்கள் பகுதி விவசாயிகள் படும் நஷ்டம் அடைந்துள்ளனர். உடனடியாக நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டை அரசு தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாங்கள் நீண்ட நாட்களாகவே அண்டை மாநிலமான கர்நாடகாவை போன்று யானைகள் வனப்பகுதியில் இருந்து ஊருக்குள் வராதவாறு ரயில்வே தண்டவாள இரும்பு கம்பி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகிறோம். மாவட்ட நிர்வாகம் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

# ஆன்லைன் டிரேடிங் முதலீடு - என்ஜினீயரிடம் ரூ.9.54 லட்சம் மோசடி

**தஞ்சாவூர், பிப்.21:** தஞ்சை மாவட்டம் பாபநாசம் பகுதியை சேர்ந்த 26 வயது நபர் சாப்ட்வேர் என்ஜினீயராக பணியாற்றி வருகிறார்.

இவரது செல்போனிற்கு டெலிகிராம் செயலி வாயிலாக ஒரு லிங் வந்தது. பின்னர் சலீம் முகமதுவை தொடர்பு கொண்டு பேசிய பெண் ஒருவர் ஆன்லைன் டிரேடிங்கில் பணம் முதலீடு செய்தால் நிறைய லாபம் கிடைக்கும் என்று தெரிவித்துள்ளார். பின்னர் இதற்காக பதிவு செய்து கொள்ள டெலிகிராமில் ஒரு லிங்கையும் அனுப்பி உள்ளார். இதனை உண்மை என்று நம்பிய என்ஜினீயர் கடந்த 15.11.2025 முதல் 20.11.2025 வரை 31 ஆன்லைன் பரிவர்த்தனைகள் மூலம் ரூ.9.63 லட்சத்தை அனுப்பியுள்ளார்.

இதில் ஒருமுறை மட்டும் லாபம் என்று ரூ.8860 மட்டும் அனுப்பி வைத்துள்ளனர். பல நாட்கள் கடந்த நிலையில் எவ்வித லாபத் தொகை வரவில்லை. இதுகுறித்து சலீம் முகமது அந்த டெலிகிராம் லிங்கில் தொடர்பு கொள்ள முயன்றுள்ளார். ஆனால் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இதையடுத்து சலீம் முகமது ரூ.9.54 லட்சத்தை தன்னிடம் இருந்து மோசடி செய்து விட்டனர் என்பதை உணர்ந்துள்ளார்.

இதுகுறித்து அவர் தஞ்சை மாவட்ட சைபர் கிரைம் போலீசில் புகார் செய்தார். இதன் பேரில் இன்ஸ்பெக்டர் அறிவழகன் மற்றும் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

இதில் பணம் அனுப்பிய வங்கி கணக்குகள் குஜராத் மாநிலத்தை சேர்ந்தவை என்பது தெரிய வந்தது. தொடர்ந்து அந்த வங்கிகளுக்கு தஞ்சாவூர் சைபர் கிரைம் போலீசார் மெயில் அனுப்பி விசாரித்ததில் 11 வங்கிகளில் இருந்து சம்பந்தப்பட்ட வங்கி கணக்கில் பணம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தென்காசியில் நகைக்கடை உரிமையாளரை கடுமையாக தாக்கிய கும்பல்



**தென்காசி, பிப்.21:** தென்காசி நகரப்பகுதியை சேர்ந்தவர் ஹர்ஷத். இவர் தென்காசி நகரின் மையப்பகுதியில் உள்ள அம்மன் சன்னதி பஜாரில் நகைக்கடை நடத்தி வருகிறார்.

இவரிடம் சில மாதங்களுக்கு முன்பு அதே சன்னதி பஜாரில் நகைக்கடை நடத்தி வரும் உரிமையாளரான காலிப் என்பவர், தனக்குத் தெரிந்த ஒருவரின் 56 கிராம் நகை ரூ.3.5 லட்சத்திற்கு அடமானத்தில் உள்ளதாகவும், அந்த நகையை அடகில் இருந்து திருப்ப நீங்கள் பணம் கொடுத்தால், அவர் அந்த நகையை உங்களிடமே விற்பனை செய்வார் என கூறி உள்ளார்.

இந்த நிலையில், ஹர்ஷத் தன்னிடம் இருந்த ரூ3.5 லட்சம் பணத்தை காலிப்பிடம் கொடுத்து அந்த நகையை திருப்பிய நிலையில், அந்த நகை தரம் குறைந்த நகையாக இருந்துள்ளது.

அதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த ஹர்ஷத் இது தரம் குறைந்த தங்கம் எனவும், இது எனக்கு வேண்டாம் தன்னுடைய பணத்தை திருப்பி தாருங்கள் என கூறியுள்ளார்.

ஆனால், பணத்தை திருப்பி தராமல் காலிப் ஏமாற்றியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக ஹர்ஷத் நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்த நிலையில், நேற்று இரவு ஹர்சத்தை, காலிப் உள்பட சிலர் பேச்சுவார்த்தைக்கு அழைத்து கடுமையாக தாக்கி உள்ளனர். இதுதொடர்பான சி.சி.டி.வி. காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கிடையே இந்த சம்பவம் தொடர்பாக தென்காசி போலீசார் வழக்குப்பதிவு செய்து ஹர்சத்தை தாக்கிய காலிப் மற்றும் அவரது சகோதரர்களான அஸ்லம், ஹாஜி உள்ளிட்ட 4 பேரை பிடித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை கடற்கரை - தாம்பரம் தடத்தில் புறநகர் மின்சார ரயில் சேவை பாதிப்பு




**சென்னை, பிப்.21:** சென்னையில் கடற்கரை - தாம்பரம் இடையிலான வழித்தடத்தில் புறநகர் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. சிக்னல் கோளாறு காரணமாக இந்த தடத்தில் இயக்கப்படும் ரயில்கள் வழியிலேயே நிறுத்தப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

சென்னையில் புறநகர் ரயில் சேவை கடந்த 1930-களில் தொடங்கியது. வணிக ரீதியாக சென்னையை இணைக்கும் நோக்கில் இந்த ரயில் சேவை பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் கட்டமைக்கப்பட்டது.

தற்போது சென்னை கடற்கரை ரயில் நிலையத்தில் இருந்து தாம்பரம், செங்கல்பட்டு, திருமால்பூர் தடம், கடற்கரை - வேளச்சேரி, கடற்கரை - கும்மிடிப்பூண்டி, கடற்கரை - அரக்கோணம் என நான்கு தடங்களில் சென்னை புறநகர் ரயில்கள் இயக்கப்படுகிறது. இதில் பள்ளி - கல்லூரி மாணவர்கள், வேலைக்கு செல்லபவர்கள் என அனைவரும் பயணிக்கின்றனர்.

புறநகர் ரயில் சேவையில் மாற்றம்: இந்த சூழலில் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப் படும் மறுசீரமைப்பு பணிகள் காரணமாக, நடைமேடை 10 மற்றும் 11-ல் இருந்து இயக்கப்படும் புறநகர் மின்சார ரயில்கள் வரும் 20-ம் தேதி நள்ளிரவு முதல் ஏப். 5-ம் தேதி நள்ளிரவு வரை நடைமேடை 5 மற்றும் 6-ல் இருந்து இயக்கப்படும் என தெற்கு ரயில்வே (சென்னை கோட்டம்) அறிவித்தது.

சென்னை கடற்கரையில் இருந்து தாம்பரம் மற்றும் செங்கல்பட்டுக்கு இயக்கப்படும் புறநகர் மின்சார விரைவு ரயில்கள் 6-வது நடைமேடையிலும், செங்கல்பட்டு, தாம்பரத்தில் இருந்து கடற்கரை வரை இயக்கப்படும் மின்சார ரயில்கள் 5-வது நடைமேடையிலும் இயக்கப்படும். இந்த 45 நாட்களிலும் தற்காலிக அட்டவணைப்படி மட்டுமே மின்சார ரயில்கள் இயக்கப்படும்.

புதிய எண்கள் மற்றும் கால அட்டவணையுடன் 160 மின்சார ரயில்கள் இயக்கப்படும். 80 ரயில்கள் சென்னை கடற்கரையில் இருந்தும், 80 ரயில்கள் செங்கல்பட்டு, தாம்பரத்தில் இருந்தும் இரு மார்க்கமும் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்தது.

புறநகர் மின்சார ரயில் சேவைகளின் புதிய அட்டவணையின் படி, தற்போது இயக்கப்படும் 204 ரயில் சேவைகளுக்குப் பதிலாக மொத்தம் 160 ரயில் சேவைகள் இருமார்க்கமாக இயக்கப்படும். செங்கல்பட்டு மற்றும் தாம்பரம் முதல் கடற்கரை வரை மொத்தம் 67 ரயில் சேவைகள் இயக்கப்படும்.

எழும்பூர் நிலையத்திலேயே 11 ரயில் சேவைகள் நிறுத்தப்படும் என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது. புறநகர் சேவைகள் குறைக்கப்பட்டதால் பயணிகளுக்கு உதவும் வகையில் தாம்பரம், கிளாம்பாக்கத்துக்கு கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என மாநகர் போக்குவரத்து கழகம் தெரிவித்தது.

ரயில் சேவை பாதிப்பு: இந்த சூழலில் புறநகர் ரயில் சேவையில் மாற்றம் மேற்கொள்ளப்பட்ட முதல் நாளன்றே கடற்கரை - தாம்பரம் தடத்தில் ரயில் சேவை பாதிக்கப்பட்டது. சிக்னல் கோளாறு காரணமாக ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்.

இதனால் ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. ரயில் சேவை பாதிப்பால் பயணிகள் அவதியடைந்தனர்.

# மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும்- மெரினா கடற்கரையில் ரோப்கார் திட்டத்திற்கு எதிர்ப்பு

**சென்னை, பிப்.21:** சென்னை மெரினா கடற்கரையில் ரோப்கார் திட்டத்தை செயல்படுத்த மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இதற்கான அறிவிப்பு பட்ஜெட்டில் நேற்று வெளியிடப்பட்டது. இதற்கு தமிழ்நாடு மீன்பிடி தொழிலாளர்கள் சங்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மலைப் பிரதேசங்களிலும், பனிப் பிரதேசங்களிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு திட்டத்தை கடற்கரை பகுதியில் கொண்டு வர வேண்டியதன் அவசியம் என்ன?

பெருநகர சென்னை மாநகராட்சியின் இந்த செயல் இருக்கும் இயற்கையான புகழ்வாய்ந்த மெரினா கடற்கரையில் நெய்தல் நிலப்பரப்பை சீர்குலைக்கும் செயலாகும்.

கார்ப்பரேட் நிறுவனம் லாபம் சம்பாதிக்க மெரினா கடற்கரையை விற்க நினைப்பது வரலாற்று அபத்தம் மட்டுமல்ல, சென்னை வாழ் மக்களுக்கும், மீனவர்களுக்கும் இழைக்கும் பெரும் அநீதியாகும்.

ஏற்கனவே மெரினா கடற்கரையில் நீலக்கொடி பிரதேச திட்டத்தை அமல்படுத்துவதற்கான திட்டத்தை அறிவித்து அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

நீலக்கொடி பிரதேச திட்டத்தை மெரினா கடற்கரையில் அமல்படுத்தக் கூடாது என அனைத்து மீனவ கிராம மக்களும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் இப்பகுதியில் ரோப் கார் திட்டத்தை கொண்டு வருவது மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

எனவே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலையிட்டு இந்த திட்டத்தை திரும்பப் பெற நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று சங்கத்தின் செயலாளர் ஜெயசங்கரன் தெரிவித்துள்ளார்.

# உலக அரங்கில் முன்னிலை வகிக்க சென்னையின் வளர்ச்சி பல மடங்காக வேண்டும்: ஜெ.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தல்

**சென்னை, பிப்.21:** உலக அரங்கில் முன்னிலை வகிக்க, சென்னையின் வளர்ச்சி பல மடங்காக இருக்க வேண்டும். நீடித்த வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்று தமிழக மின்வாரியத்தின் தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னையின் எதிர்காலத்தை வடிவமைப்பது குறித்து கருத்தரங்கம் சென்னையில் நேற்று நடைபெற்றது. இதில், தமிழக மின்வாரியத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஜெ.ராதாகிருஷ்ணன் பேசியதாவது: சென்னையின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று அதன் வரலாறு.

இந்த நகரம் படிப்படியாகக் கட்டமைக்கப்பட்டது. தமிழகத்தின் வளர்ச்சிக்கு சக்தி அளிக்கும் கலாச்சாரம், தொழில்முனைவு, மீள்தன்மை மற்றும் அசாதாரண திறமைகளைக் கொண்டுள்ளது சென்னை. மருத்துவம், கலாச்சாரத்தின் தலைநகராகவும் விளங்குகிறது.

ஒருங்கிணைப்பு தேவை: நகரில் போக்குவரத்தை வடிவமைக்கவும், பொது சுகாதாரத்தை வலுப்படுத்தவும், பொருளாதார வாய்ப்பை உருவாக்கவும் தொடர்ச்சியாக வழிகாட்ட வேண்டும். உலக அரங்கில் நம்பிக்கையுடன் போட்டியிடுவதன் மூலமாக சென்னை முன்னிலை வகிக்க வேண்டும். அதற்கு அரசு, தனியார் நிறுவனங்கள் மற்றும் குடிமக்கள் இடையே ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. நாம் ஒரே நோக்கில் ஒன்றாக நகரும்போது, நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.

சென்னையில் வளர்ச்சி பல மடங்காக இருக்க வேண்டும். மேலும், நீடித்த வளர்ச்சியில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில், அதிமுக முன்னாள் அமைச்சர் மாஃபா பாண்டியராஜன், 'சூப்பர் சென்னை' நிர்வாக இயக்குநர் ரஞ்சித் ரத்தோட் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் தலைவர்கள் கலந்துகொண்டு, தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

# தேசிய அடையாள அட்டை வழங்கும் விழா...

**சென்னை, பிப்.21:** ஒருங்கிணைந்த கல்வி திட்டம் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான உள்ளடக்கிய கல்வி திட்டத்தின் கீழ் காணை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கும் ஒன்றிய பயிற்சி மையத்தில் 12.02.2026 அன்று நடைபெற்ற மருத்துவ மதிப்பீட்டு முகாமில் மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டது...


அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் செந்தில் குமார்... வட்டார வளமைய மேற்பார்வையாளர் ஆரோக்கிய அனிதா ஆகியோர் 25 மாணவர்களுக்கு வழங்கினர்...

அரசு நலத்திட்ட உதவிகள்... மாற்றுத் திறனாளி மாணவர்களின் சுய பராமரிப்பு... உதவி உபகரணங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது....

சிறப்பு பயிற்றுனர்கள்... லியோனி விஜயலட்சுமி சரண்யா பரமேஸ்வரி... மாற்றுத் திறனாளி மாணவர்கள்... மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இயன் முறை மருத்துவர்... தே.சௌந்தரராஜன் நன்றி கூறினார்...

# இன்று 6, நாளை 3 மாவட்டங்களில் கனமழை!



**சென்னை, பிப்.21:** தமிழகத்தில் நாளை மற்றும் நாளை மறுநாள் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

பிப். 20ல் தென் தமிழகம் மற்றும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வட கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில், லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

பிப். 21ல் தென் தமிழகத்தில் அநேக இடங்களிலும், வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஓரிரு இடங்களில் பலத்த காற்று மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

பிப். 22ல் தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஓரிரு இடங்களில் பலத்த காற்று மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

பிப். 23 முதல் 26 வரை தென் தமிழகம் மற்றும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை..

பிப். 20, 21ல் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றதிற்கான வாய்ப்பு குறைவு.

இன்று (20-02-2026): வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 31-32° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23-24° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

பிப். 20 மன்னார் வளைகுடா அதனை ஒட்டிய தென்தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

இந்தப் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்லவேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# பேரவைத் தேர்தல்: திமுக விருப்ப மனு விநியோகம்!

**சென்னை, பிப்.21:** தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட விரும்புவோருக்கு விருப்ப விநியோகிக்கும் பணி தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம் உள்ளிட்ட மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேதிகள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில், அனைத்துக் கட்சிகளும் தேர்தல் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. அதிமுக, பாமக, தவெக, மநீம உள்ளிட்ட கட்சிகள் சார்பில் போட்டியிட விரும்புவோருக்கு விருப்ப மனுக்கள் விநியோகிக்கப்பட்டது.

இன்றுமுதல் திமுக சார்பில் போட்டியிட விரும்புவோருக்கு விருப்ப மனுக்களை விநியோகிக்கும் பணிகள் தொடங்கியுள்ளன. காலைமுதல் கட்சி நிர்வாகிகள் விருப்ப மனுக்களை ஆர்வத்துடன் பெற்று வருகின்றனர்.

மார்ச் 2 ஆம் தேதி வரை அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை பெற்று விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவை தொகுதிக்கான விண்ணப்பக் கட்டணம் பொதுத் தொகுதிக்கு ரூ. 25,000-ஆகவும், மகளிர் மற்றும் தனித் தொகுதிக்கு ரூ. 15,000-ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தோழமைக்கட்சிகளுக்கென பகிர்ந்து கொள்ளப்பட்ட தொகுதிகளில் போட்டியிட விண்ணப்பித்திருப்பின் அவர்களது விண்ணப்பக் கட்டணம் பின்னர் திருப்பித் தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போளூர் கித்மத்துஸ் ஸாஇமீன் ஸஹர் கமிட்டி சார்பில் ஸஹர் உணவு



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் கித்மத்துஸ் ஸாஇமீன் ஸஹர் கமிட்டி சார்பில் தலைவர் ஷபியுல்லா தலைமையில் நோன்பு உள்ள நபர்களுக்கு அனைவருக்கும்ரமலான் பிறை தென்பட்ட முதல் காலை 3 மணி முதல் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. செயலாளர்K.M.K.நூருல்லா சாஹிப் ,பொருளாளர் R.மாலிக், நிர்வாகிகள் துணைத் தலைவர்கள் மன்சூர் பாஷா முஜீப், ஹசேன் பாஷா , ஷாநவாஸ், முஹம்மது அர்ஷத், பாபர், உசேன் கான், அல்தாப், ரபிம் துணைச் செயலாளர்கள் முபாரக் பாஷா, கலீல், சாதிக், ஜாங்கிரி, முகமது அலி, முஹம்மத் சஜ்ஜாத், அசாருதீன், சையத் கம்ரு, தஸ்தகீர், ஆரிப்,முஷ்ரப், சாதிக், அக்பர் ஆகியோர் உடனிருந்து சஹர்உணவு வழங்கி வருகிறார்கள்.

# சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உலக தாய்மொழி தினக் கொண்டாட்டம்




இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியம் சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உலக தாய்மொழி தின விழா அரசு அறிவித்தபடி ஒரு நாள் முன்னதாக கொண்டாடப்பட்டது. ஆண்டுதோறும் பிப்ரவரி 21 ஆம் நாள் உலக தாய்மொழி தினம் கொண்டாடப் படுகிறது. அதனையொட்டி மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மாணவர்கள் தங்களுக்கு பிடித்தமான தமிழ் எழுத்துக்களை எடுத்து மகிழ்ந்தனர். தலைமையாசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன், இடைநிலை ஆசிரியர் அ.தாஹிரா ஆகியோர் தமிழ்வழிக் கல்வியின் தேவை மற்றும் சிறப்பு, தமிழ்வழி கல்வியில் பயிலும் மாணவர்களுக்கு அரசு வழங்கும் வாய்ப்புகள் பற்றி பேசினார்கள்.

# ரூ.10 கோடியில் புனரமைக்கப்பட்ட ஆவண காப்பக கட்டிடம்: உதயநிதி திறந்துவைத்தார்



**சென்னை, பிப்.21:** எழும்பூரில் ரூ.10 கோடியில் புனரமைக்கப்பட்ட ஆவணக் காப்பகத்தின் பழமையான கட்டிடம், ரூ. 15 லட்சத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கண்காட்சிக் கூடம் ஆகியவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: உயர்கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை தமிழகத்தின் வரலாறு, பண்பாடு மற்றும் நிர்வாகம் சார்ந்த அரிய ஆவணங்களைப் பாதுகாத்து வரும் தனது சேவையில் நூறு ஆண்டுகள் கடந்து சாதனை படைத்து வருகிறது.

கடந்த 1909-ம் ஆண்டு மெட்ராஸ் ரெக்கார்டு ஆபீஸ் என்ற பெயரில் தொடங்கப்பட்டு, 1973-ல் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி ஆவணக் காப்பகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, 2009-ம் ஆண்டு தனது 100-வது ஆண்டை நிறைவு செய்தது.

சுமார் 40 கோடி ஆவணங்களை கொண்டுள்ள இக்காப்பகம், ஆராய்ச்சியாளர்களின் மிகச் சிறந்த தேடல் களமாக உள்ளது.

இந்நிலையில், ரூ.10 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட எழும்பூரில் உள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் பழமையான தலைமை அலுவலக கட்டிடம் மற்றும் ரூ.15 லட்சத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கண்காட்சிக் கூடம் ஆகியவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

அத்துடன், ஆவண காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் 100 வருடங்கள் பழைமையான 10 லட்சம் அரிய ஆவணங்களை ஜப்பானிய திசு முறையில் செப்பனிட்டுப் பாதுகாக்கும் பணிகளையும் தொடங்கி வைத்தார்.

நவீன கண்காட்சிக் கூடத்தில், வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதை விவரிக்கும் ஆவணம், மெட்ராஸ் ராஜதானி, தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆவணம், சென்னையை எம்டன் கப்பல் தாக்கியது குறித்த ஆவணம் உள்ளிட்ட அரிய வரலாற்று ஆவணங்கள் பொதுமக்களும், மாணவர்களும் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, கோவி. செழியன், மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, உயர் கல்வித்துறை செயலர் பொ. சங்கர், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை ஆணையர் சு. மலர்விழி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




# தேர்தல் தேதி அறிவிப்பை தள்ளி வைக்கக் கோரி ராமதாஸ் தாக்கல் செய்த மனு தள்ளுபடி!



**சென்னை, பிப்.21:** பாமக தலைவராக தன்னை அறிவிக்கும் வரை தமிழக தேர்தல் தேதி அறிவிப்பை தள்ளி வைக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தொடர்ந்த புதிய வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. மேலும், சிவில் நீதிமன்றத்தை நாட உத்தரவிட்டுள்ளது.

பாமக கட்சியின் உரிமை தொடர்பாக தலைவர் அன்புமணிக்கும், நிறுவனர் ராமதாசுக்கும் இடையில் மோதல் நடந்து வரும் சூழலில், கட்சிக்கு மாம்பழ சின்னம் ஒதுக்கீடு செய்துள்ளதாக, தேர்தல் ஆணையம், அன்புமணி முகவரிக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

இந்த கடிதத்தை ரத்து செய்து, தனது முகவரிக்கு கடிதம் அனுப்ப உத்தரவிடக் கோரியும், கட்சி நிறுவனர் ராமதாஸ் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், கடந்த 2025 மே மாதமே பதவிக் காலம் முடிந்த நிலையில், கட்சியின் தலைவராக நீடிப்பதாக போலி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக அன்புமணி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கட்சி நிறுவனர் என்ற முறையில் தனது அங்கீகாரம் இல்லாமல், சட்டவிரோதமாக கட்சி கூட்டங்களை நடத்த அன்புமணி உரிமை கோர முடியாது எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை ஏற்கனவே விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, தேர்தல் வழக்கை மூன்று வாரத்துக்குள் பதில் அளிக்க ஏற்கனவே உத்தரவிட்டு இருந்தது.

இந்நிலையில் பாமக நிறுவனர் ராமதாஸ் புதிய வழக்கு ஒன்றை தொடர்ந்திருந்தார். அதில், தேர்தல் ஆணையம் சூழ்ச்சியால் மாம்பழம் சின்னம் முடக்க வாய்ப்புள்ளதாகவும் எனவே பாமக தலைவர் தான் மட்டுமே என்பதை பதிவு செய்யும் வரை தமிழகம் மற்றும் புதுவை தேர்தல் அறிவிப்பை தள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருந்தார்.

இந்த வழக்கில் தேர்தல் ஆணையத்தை பிரதிவாதியாக சேர்த்து இருந்தார். இந்த வழக்கை தலைமை நீதிபதி அமர்வு இன்று விசாரித்து, இந்த விவகாரம் தொடர்பாக சிவில் கோர்ட் தான் முடிவு செய்ய வேண்டும் எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. மேலும், இதுபோன்ற மனுக்களால் நீதிமன்ற நேரத்தை வீணடித்தால் அபராதம் விதிக்க நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க.-வில் இணைவீர்களா? ஓ.பி.எஸ். சொன்ன பளிச் பதில்!



**சென்னை, பிப்.21:** தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவடையும் நிலையில், சட்டப்பேரவை வளாகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்தார் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம்.

இதைத் தொடர்ந்து சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த ஓ. பன்னீர்செல்வம், "ஐந்து ஆண்டுகால தி.மு.க. ஆட்சி சிறப்பாக இருந்தது, இதற்கு வாழ்த்து தெரிவிக்க காலையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை சந்தித்தேன். தி.மு.க.வின் ஐந்து ஆண்டு கால ஆட்சி சிறப்பாக இருந்ததால், மீண்டும் ஆட்சிக்கு வர வாய்ப்பு உள்ளது. மக்கள் நினைப்பதை தான் எனது ஆதரவு எம்.எல்.ஏ. ஐயப்பன் சட்டமன்றத்தில் பேசியுள்ளார்"

தி.மு.க.வில் இணைவீர்களா என்று கேள்விக்கு பதில் அளித்த ஓ. பன்னீர்செல்வம், "பொறுத்து இருந்து பாருங்கள்" என்று தெரிவித்தார். தி.மு.க.வில் இணைவது பற்றிய கேள்விக்கு மறுப்பு தெரிவிக்காதது, ஓ. பன்னீர்செல்வம் தி.மு.க. ஆதரவு மனநிலையில் இருப்பதன் வெளிப்பாடாக பார்க்கப்படுகிறது.

# திமுக கூட்டணியிலிருந்து காங்கிரஸ் விலகாது: மாணிக்கம் தாகூர் எம்.பி.

**சென்னை, பிப்.21:** தேமுதிக இணைந்ததால் திமுக கூட்டணியிலிருந்து காங்கிரஸ் விலகாது என அந்தக் கட்சியின் விருதுநகர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் மாணிக்கம் தாகூர் உறுதிபடத் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது: திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்தது மகிழ்ச்சிக்குரியது. திமுகவுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையேயான உறவு நீண்ட காலமானது. எனவே, தேமுதிகவின் வருகையால் திமுக கூட்டணியிலிருந்து காங்கிரஸ் விலகும் என்ற ஊகம் முற்றிலும் தவறானது. திமுக கூட்டணி வெற்றி பெறுவது உறுதி.

அதிமுக- பாஜக கூட்டணி ஏற்கெனவே மக்களால் நிராகரிக்கப்பட்ட கூட்டணி. வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில் இந்தக் கூட்டணி மூன்றாவது இடத்தையே பெறும்.

தோல்வி பயம் காரணமாக பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை உள்ளிட்ட சிலர் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்க்கலாம். நயினார் நாகேந்திரன் தனது தொகுதியை மாற்றுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது என்றார் அவர்.

காங்கிரஸ் கட்சியில் அவ்வப்போது எதிர்ப்புக் குரல் எழுவது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, காங்கிரஸ் கட்சி மிகப் பெரிய ஆலமரம்; அதிலிருந்து அவ்வப்போது சிறிது சப்தம் வருவது இயல்பானதே என்றார் அவர்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com